# "பட்டின சபை அங்கததவர்களுக்கும் 'படி' வேண்டும்"

காங்கேசன்துறை, ஞாயிறு
பட்டினசபை உறுப்பினர்களுக்கு மாதாந்த அலவன்சாக 50 ரூபாவும் இலவச தபால் தந்தி சேவையும் வேண்டுமென்று கோரப்படும் தீர்மானமொன்று அகில இலங்கை பட்டின சபைகளின் இரண்டாவது வருடாந்த மகாநாட்டில் நிறைவேறியது.

காங்கேசன்துறை பட்டின சபை காரியாலயத் திடலில் மத்துகம பாராளுமன்ற உறுப்பினர் திரு. தயா. ரி பஸ்குபல் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில், பல முக்கிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

காங்கேசன்துறை பட்டின சபை தலைவர் திரு. ஏ. வி. சதாசிவம், பிரதிநிதிகளை மகாநாட்டில் வரவேற்றுப் பேசினர்.

கீழ்க்கண்ட தீர்மானங்களும நிறைவேறின: உள்ளூராட்சி மன்ற தலைவரை, அதிகாரியின் அறிக்கையின் பிரகாரம் நீக்குவதன் காரணமாக சம்பந்தப்பட்ட தலைவர்மீது, சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்களை தளர்ப்பதற்குப் போதிய அவகாசம்

[5-ம்பக்கம் பார்க்க]


Registered as a Newspaper in Ceylon * விலை சதம் 10

# ஈழநாடு

EELANADU

தபால்பெட்டி எண். 49 · போன் 389

National Tamil Daily · தேசிய தினசரி

மலர் 9 · இதழ் 184

யாழ்ப்பாணம் பிலவங்க ஆடி 29 ஜு அவ். 7 திங்கட்கிழமை [14-8-67]


# டிசம்பரில் யாழ். மாநகர சபை தேர்தல்

## தமிழரசு, தமிழ்காங்கிரஸ், துரையப்பாமுன்னணி சுறுசுறுப்பு

யாழ்ப்பாணம், திங்கள்
யாழ்ப்பாண மாநகர சபைத் தேர்தல் இவ் வருடம் டிசம்பர்மாதம் நடைபெறவிருப்பதாக உள்ளூராட்சி அமைச்சின் நெருங்கிய வட்டாரங்களிலிருந்து தகவல் கிடைத்திருக்கிறது. தற்பொழுதுள்ள 17 வட்டாரங்களுக்குமேதேர்தல்நடைபெறுமென்றும்தெரிகிறது.

இந்த மாநகரசபைத்தேர்தலில் போட்டியிடுவதற்கு பல்வேறு அரசியல் கட்சிகளும், சுயேச்சையாளர்களும் தேர்தல்வேலைகளில் இப்பொழுது ஈடுபடத் தொடங்கியுள்ளனர்.

தமிழரசுக்கட்சியும், தமிழ் காங்கிரஸும் இந்தத்தேர்தலில் சகல வட்டாரங்களிலும் அபேட்சகர்களை நிறுத்துவதற்கு முன்வந்துளளதாக அறியப்படுகிறது.

கலைக்கப்பட்ட யாழ். மாநகரசபையின் மேயராகவிருந்த திரு. ஏ. ரி. துரையப்பாவின் தலைமையில் அந்தமாநகரசபையில் அங்கத்தவர்களாகஇருந்த சிலர் கூட்டணியொன்றை அமைத்துச்சகல வட்டாரங்களிலும் அபேட்சகர்களை நிறுத்துவதென தீர்மானித்திருப்பதாகக் கூறப்படுகிறது.

வட்டார ரீதியாக அபேட்சகர்களைத் தெரிவுசெய்வதிலும், பிரசாரவேலையிலும் நேற்று முதல் தமிழ்காங்கிரஸ் ஈடுபட்டுள்ளது.

ஒவ்வொரு வட்டாரத்திலும், ஐந்துபேர் கொண்ட ஒரு கமிட்டி தெரிவுசெய்யப்பட்டிருப்பதாகவும் அந்த வட்டாரத்திற்கான அபேட்சகர்களை இக்கமிட்டி சிபார்சு செய்யுமென்றும் தெரியவருகிறது.

ஏற்கனவே ஐந்து வட்டாரங்களில்அபேட்சகர் தெரிவு நடைபெற்றுள்ளதாகவும் தொடர்ந்துமற்றும் வட்டாரங்களில் அபேட்சகர்கள் தெரிவு நடைபெறுமென்றும் அறியப்படுகிறது.

## மதுவிலக்கு நீடிக்கும்

### முதலமைச்சர் அண்ணு அறிவிப்பு

சென்னை, ஆக. 12
சென்னையிலும், செங்கற்பட்டு ஜில்லாவிலும் வார்ணிஷ் மரணங்கள் காரணமாக மதுவிலக்கு கொள்கையை அரசாங்கம் மறுபரிசிலனை செய்யப்போவதில்லையென்று திரு. சி. என். அண்ணுதுரை நிருபர்களிடம் தெரிவித்தார்.

செங்கற்பட்டு, காஞ்சிபுரம், ராயப்பேட்டைபெரிய ஆஸ்பத்திரிகளுக்குச்சென்று விஷ வார்ணிஷ் குடித்து தவிக்கின்ற நோயாளர்களைநேற்றும் முதலமைச்சர் சென்று பார்வையிட்டு ஆறுதல் கூறினர்.

திரு. அண்ணுதுரை நிருபர்களிடம் கூறியதாவது:-
'அவர்களுடைய கஷ்டங்களைப் பார்த்தபோது மனிதாபிமானத்தின் காரணமாக மதுவிலக்கை மறு பரிசிலனை செய்யலாமா என்ற ஆசை என்னைத்தூண்டியது. உடனே நான் என்னை சமாதானப்படுத்திக் கொண்டேன். இனி மீண்டும் பரிசிலனை செய்யவேண்டிய அவசியமில்லையென்ற முடிவுக்கு வந்துவிட்டேன்.'

### ராஜாஜி கருத்து

சுதந்திரா கட்சித் தலைவர் ராஜாஜி வார்ணிஷ் மரணங்கள் பற்றிக் கூறியதாவது:
"சட்டத்தை மீறுகின்ற சுயநலச் சுரண்டல் காரர்களது நடவடிக்கையால் பழகிப் போன குடிகாரர்களுக்கு இப்படியான ஒரு துரதிர்ஷ்டம் நடந்திருக்கிறது. ஆகையால் இந்த நிகழ்ச்சியை கண்டு பயந்துபோய் மதுவிலக்கை வாபஸ்பெறக்கூடாது"

## மருதமடுத் திருப்பதியில் பக்தர்கள் குவிகின்றனர்

### இன்று சற்பிரசாதத் திருநாள்

மன்னர், ஞாயிறு
பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் மருதமடுத்திருப்பதியில் குவிந்துகொண்டிருக்கிறர்கள். மடுமாதா திருவிழாக்களின் இறுதி விழாவான பெருநாள் 15-ம் தேதி செவ்வாய்க்கிழமை நடைபெறவிருக்கிறது. அன்றைய தினம் ஒரு லட்சத்துக்கு அதிகமான பக்தர்கள் வந்துசேர்வார்களென எதிர்பார்க்கலாம்.

மடுமாதா திருவிழாக்கள் சோலாகலமாக இப்போது நடைபெற்றுவருவது தெரிந்ததே. நாளை சற்பிரசாத திருநாள் நடைபெறுகிறது. திருகோணமலை துணை மேற்றிராணியார் வண. பிதா டாக்டர்பி. தியோகுப்பிள்ளை அன்றைய மாலை ஆராதனைகளை நடாத்திவைப்பார். தமிழிலும், சிங்களத்திலும் ஆராதனைகள் நடாத்தப்படும்.

மிருகங்களைச் சுடுதல், மரங்கள்வெட்டி கொண்டு செல்லுதல், மதுபானங்கள் ஆகியவற்றுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது, பக்தர்களுக்கு இடையூறுகள் ஏற்படாத விதத்தில் பொலிஸ் பாதுகாப்பு இப்போது அதிகரிக்கப்பட்டுள்ளது.

---

### சுந்தரர் குருபூசை

சுழிபுரம், ஞாயிறு
சுழிபுரம் அறுபத்துமூவர் குருபூசை மடத்தில், சுந்தரர் குருபூசை நடைபெற்றது. புராணப்படிப்பு, விசேஷ பூசை, மகேஸ்வர பூசை ஆகியன இடம்பெற்றன.

தமிழ் பிரதேசமருத்துவதாதிகளுக்கு

## சிங்களத் தேர்ச்சி நிபந்தனை வேண்டாம்

### சுகாதார மந்திரியை ஜி. ஜி. கேட்கிருர்

யாழ்ப்பாணம், திங்.
"தமிழ்ப் பிரதேசங்களில் கடமையாற்றும் மருத்துவதாதிகளுக்கு சிங்களதேர்ச்சியிலிருந்து விதிவிலக்கு அளிக்கவேண்டும்"

சுகாதார மந்திரி திரு. எம். டி. எச். ஜெயவர்த்தனவிற்கு யாழ்ப்பாணம் எம். பி. திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் எழுதியுள்ள கடிதத்தில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அக்கடிதத்தில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது: புதிதாக நியமனம்செய்யப்பட்டு தமிழ்ப்பகுதிகளில் வேலைசெய்யும், மருத்துவதாதிகளின் நிலைமைபற்றி கவனம் செலுத்தும்படி கேட்டுக்கொள்கிறேன.

இந்த மருத்துவ தாதிகள், சிங்கள பிரதேசங்களில் கடமையாற்றவில்லை. இவர்கள் செய்யவேண்டிய வேலைகளுடன், சிங்களத்திலும் தேர்ச்சிபெறுவது முடியாத காரியமாயிருக்கிறது. இவர்களின் வருடாந்த சம்பள உயர்வு சில காலமாக நிறுத்திவைக்கப் பட்டிருப்பதாக அறிகிறேன் நிறுத்திவைக்கப்பட்டுள்ள சம்பள உயர்வை வழங்க நடவடிக்கை எடுக்கவும்.

## சிங்கள சட்டத்தால் வேலை இழந்தோருக்கு ஜி. ஜி. யின் ஆறுதல்

யாழ்ப்பாணம், திங்.
"ஐக்கிய நாடுகள் சபைக்கு செல்லு முன் உங்கள் பிரச்னை பற்றி பிரதமருடன் பேச்சுவார்த்தை நடத்தி அதற்கு தீர்வுகாண முயற்சிப்பேன்"

சிங்கள சட்டத்தால் வேலையிழந்த தமிழ் அரசாங்க ஊழியர் தூதுகோஷ்டியொன்று நேற்று முன்தினம் யாழ்ப்பாண எம். பி திரு. ஜி. ஜி. பொன்னம்பலத்தை பேட்டி கண்டபோது அவர் மேற்கண்டவாறு உறுதியளித்தார்.

தேசிய அரசாங்கம் அமைக்கப்பட்டு கடந்த இரண்டரை வருடங்களாக தங்கள் பிரச்னை தீர்க்கப்படாமலிருந்து வருவதாகவும் தேசிய அரசாங்கம் ஆட்சியிலிருக்கும்போதே தங்கள் பிரச்னை தீர்க்கப்படவேண்டுமென்றும், அத்தூதுகோஷ்டி வலியுறுத்தியதாக தெரியவருகிறது.

சிங்கள சட்டத்தால் வேலையிழந்த தமிழ் அரசாங்க ஊழியர்களில் கூடிய தொகையானேர், தங்களுக்கு நஷ்டஈடு தரப்படவேண்டுமென கருதுவதாகவும், மிகச் சிலரே மீண்டும் சேவையாற்ற விரும்புவதாகவும் தெரியவருகிறது.

## பக்தர்கள் நெரிசலில் 17 பேர் மாண்டனர்

### திருப்பதியில் சம்பவம்

திருப்பதி, ஆக. 13
திருப்பதி மலையில் சுவாமி கும்பிடச் சென்ற மக்கள் கூட்டத்தில் ஏற்பட்ட நெரிசல் காரணமாக நேற்று 8 பெண்களும், 7 குழந்தைகளும் உட்பட மொத்தம் 17 பேர் இறந்ததாக அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

'கியூ' வரிசையில் பக்தர்கள் சென்றுகொண்டிருந்தபோது, பின்னுலிருந்தவர்கள் முண்டியடித்துக் கொண்டு முன்னேற முயன்றபோது, கூட்டத்தில் குழப்பம் ஏற்பட்டு, மக்கள் அங்குமிங்கும் சிதறியடித்து ஓடியதாகத் தெரிகிறது.

இறந்த 17 பேரில், ஆஸ்பத்திரியில் ஒருகுழந்தை மரணமாகியதாகவும், மற்ற 16 பேரும் ஸ்தலத்திலேயே மாண்டதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

---

திருமலை சுற்றுமதில் விளையாட்டரங்கில் கண்டி 'யங் ஒலிம்பியன்ஸ்' உதைபந்தாட்டக் குழுவிற்கும் திருமலை மாவட்ட தெரிவுவிளையாட்டு வீரர்கள் குழுவுக்குமிடையே நடைபெற்ற சிநேகபூர்வ உதைபந்தாட்டப் போட்டியில் திருமலை விளையாட்டுக் குழு 2 கோல்களால் 'யங் ஒலிம்பியன்ஸ்' குழுவைத் தோற்கடித்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரிவிளம்பரம்

### விற்பனைக்கு

உடுப்பிட்டி சந்திக்கு அண்மையிலுள்ள சிலுவில் வயல் மத்தியில் பள்ளமான அதிகமான விளைச்சல் பூமி 18 பரப்பு விற்பனைக்குண்டு. விபரங்கட்கு உடனே தொடர்பு கொள்ளவும் S. நடராசா, கூட்டுறவுச் சங்கப் பரிசோதகர், ஏழாலை மேற்கு, சுன்னாகம். 2481

### வாடகைக்கு

வீடு:
K. K. S. ரேட் தாவடிச் சந்திக்கருகாமையில் சகல வசதியும் பொருந்திய வீடு வாடகைக்கு உண்டு. ஆ. நடராசா, தாவடி, கொக்குவில். 2521

### கல்வி

மெக்கானிக் பாடங்கள்
மோட்டார் டிரக்டர் டீசல் மெக்கானிக் பாடங்களும், பயிற்சியும் ஆறு [6] மாத காலத்தில் நவீனமுறையில் போதிக்கப்படும். விரும்பும் மாணவர்கள் 28-8-67க்கு முன் விண்ணப்பிக்கவும்; அன்றி நேரில் தொடர்பு கொள்ளவும். ஸ்ரீ ராஜ ஓட்டொமபயில் என்ஜினியரிங் இன்ஸ்ரிரியூட், 8/4 ஸ்ரான்லி ரேட், மேல்மாடி யாழ்ப்பாணம். 2488

### தேவை

பூப்போடவும் வெட்டுதலும் தையல் வேலையிலும் அனுபவமும் திறமையும் உள்ள பெண்கள் தேவை. நகமைகளுடன் நேரில் 16-8-67, 20-8-67 இருநாட்களிலும் காலை 9 மணிக்கும் 1 மணிக்கும் இடையில் வரவும். முகவரி டாக்டர்சோமசுந்தரம் வைத்தியசாலைக்கு முன்னல் No. 156, மெயின் வீதி, யாழ்ப்பாணம். 2490

**REGAL** JAFFNA
Time: 4-30, 7-00 p m
9-45 p. m.
James Robertson Justice
Julie Christie
in
**THE FAST LADY**


# அரசாங்கம் கொள்வனவு செய்யாததால் திண்டாட்டம்

வட்டுக்கோட்டை, ஞாயிறு

இப்பகுதியில் உள்ளூர் உற்பத்தியாளர்கள் பெருத்த அவஸ்தைக்குள்ளாகியிருக்கின்றனர். உற்பத்தி செய்த வெங்காயத்தை உடனுக்குடன் கொள்வனவு செய்ய முடியாமல் திண்டாடுகின்றனர். அரசாங்கம் இவர்கள் வெங்காயத்தை கொள்வனவு செய்யத் தயக்கம் காட்டுவதால் குறைந்த விலைக்கே வெங்காயத்தை விற்கக் கூடிய நிலை ஏற்படுகிறதாம்.

இதேபோல் இங்குள்ள நெசவு நிலையத்தில் தயாரிக்கப்படும் சாரங்களை அரசாங்கம் கொள்வனவு செய்வதில்லையாம். இதனல் தரகர்கள் கொள்ளைலாபமடிப்பதாகவும், சாரங்களைத் தயாரித்த ஏழைப்பிள்ளைகள் பெருத்த நஷ்டமடைவதாகவும் தெரிகிறது.

## ஆண்டுவிழா

கொம்பனித்தெரு, ஞாயிறு

கொம்பனித்தெரு சைவ முன்னேற்றச் சங்கத்தின் வருடாந்த விழா இம்மாதம் 20-ம், 21-ம் திகதிகளில் கொம்பனித்தெரு சிவசுப்பிரமணியசுவாமி மண்டபத்தில் கொண்டாடப்படவிருக்கின்றனர்.

ஃ ஃ ஃ

சுழிபுரம், ஞாயிறு

சித்தங்கேணி இந்து இளைஞர் சங்க ஆண்டு விழா வரும் 19-ம் தேதி சனிக்கிழமை சங்க முன்றலில் நடைபெறவிருக்கின்றது. சொற்பொழிவுகள், கலைநிகழ்ச்சிகள், நாடகம் ஆகியனவும் இடம்பெறும்.

## திருக்கேதீஸ்வரத்தில் குருபூசை

சுழிபுரம். ஞாயிறு

சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி ஆசிரியர்கள், மாணவர்கள் அடங்கிய கோஷ்டி ஒன்று சுந்தரமூர்த்தி நாயனர் குருபூசையைக் கொண்டாடுவதற்கு நேற்று பஸ் மூலம் திருக்கேதீஸ்வரம் புறப்பட்டது. வருடாவருடம் திருக்கேதீஸ்வரத்தில் சுந்தரர் குருபூசையை சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியினர் கொண்டாடிவருகின்றனர்.

## "குற்றவாளியும் மனேநிலையும்"

வல்வெட்டித்துறை, ஞாயிறு

"ஒரு குற்றவாளியானவர் அவரின் குற்றம் நிரூபிக்கப்படும்வரை அவர் நிரபராதியே. அதேபோல் ஒருவன் குற்றம் செய்கிறபொழுது அவரின் மனேநிலையே முக்கியம் வாய்ந்தது எனக் கருத இடமுண்டு. மனேநிலையைக் கொண்டு தான் அவரைக் குற்றவாளியாகக் காணமுடியும் கிரிமினல் சட்டத்திலே மனநோயாளர் செய்யும் குற்றத்தை கிரிமினல் சட்ட[illegible] பாதுகாத்து வருகிறது."

இவ்வாறு பருத்தித்துறை ரோட்டரிக்கிளப் கூட்டத்தில் "சட்டம் மனநோயாளருக்கு என்ன விதத்தில் பாதுகாப்பு அளிக்கிறது" என்னும் விடயம் பற்றி உரை நிகழ்த்துகையில்வழக்கறிஞர் திரு. வி. பி. சுந்தரலிங்கம் கூறினர்.

இக்கூட்டத்துக்குபருத்தித்துறை இலங்கை வங்கி மனேஜர் திரு. கே. கயிலாசநாதன் தலைமை வகித்தார்.

## இவர்கள்மீது கோர்ட் நடவடிக்கை

கோப்பாய், ஞாயிறு

கோப்பாய் தெற்கு பயிர் செய்கைக்குழுக் கூட்டம் கோப்பாய் நாவலடி சனசமூக நிலைய மண்டபத்தில் நடைபெற்றது திரு. சி. குமரேசு தலைமை வகித்தார். பின்வரும் தீர்மானங்கள் மேற்படி கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டன:

O வேளைக்குளம், கோப்பாய் உப்பாறு, வட்டக்குளம் ஆகியவற்றை இணைத்து வாய்க்காலமைத்துத் தருமாறு அரசினரைக் கோருதல்.

O முதலியா வயல் குளம் சிரமதான முறையில் புனருத்தாரணம் செய்தல்.

O வயல் நிலங்களுக்கான வரிப்பணம் கட்டத் தவறியவர்களுக்கு கோர்ட்மூலம் நடவடிக்கை எடுத்தல்.

## ரூ. 200 அபராதம்

வல்வெட்டித்துறை, ஞாயிறு

முருகேசு சின்னத்தம்பி என்பவர் சட்டவிரோதமாக சாராயம் விற்றதாக குற்றஞ்சாட்டித் தொடரப்பட்ட வழக்கில் பருத்தித்துறை மாஜிஸ்ரேட் திரு. கே. விக்னராஜா எதிரிக்கு 200 ரூபா அபராதம் விதித்து தீர்ப்பளித்தார்.

## ஆங்கில பயிற்சி

யாழ்ப்பாணம், திங்கள்

நவாலியைச் சேர்ந்த யாழ்ப்பாண வட்டாரக் கல்வியதிகாரி திரு. சி. பொ. சிவபாதம் ஆங்கிலத்தை இரண்டாவது பாடமாகப் படிப்பிப்பதற்குப் பட்டதாரிகட்கான டிப்ளோமா உயர்தரக் கல்வியைப் பெறுவதற்காகப் பிரித்தானிய சபை ஸ்கலர்ஷிப்பொன்றை வழங்கியிருக்கிறது,

இவர் ஆங்கில உதவியாசிரியர்கட்குக் கூட்டுவகுப்புக்களை நடாத்திவந்துள்ளார். வவனியா, பல லி, யாழ்ப்பாணம் முதலிய பகுதிகளில் உள்ள ஆங்கில ஆசிரியர்கட்கான பயிற்சி வகுப்புக்களை நடாத்துவதற்குப் பொறுப்பாகவும் இருந்து வந்துள்ளார். இவர் விரைவில் பிரித்தானியா சென்று ஒருவ[illegible]ம் ஆங்கிலத்தில் பயிற்சி பெறுவார்.

## இவ்விடத்தில் அபாயம்

சுழிபுரம், ஞாயிறு

பொன்னலை — காரைநகர் பாலம் இருகரையோரமும் பழுதடைந்து பெரும்பெரும் பள்ளமும் திட்டியுமாகக் காணப்படுகின்றது. தவறுதலாகப் பள்ளத்தில் கால் வைத்தவர்கள் கடலுக்குள் புதையவேண்டிய நிலை ஏற்படக்கூடியதாக விருக்கிறது. வருடங்கள் பலவாகியும் பாலக் கரையோரங்கள் திருத்தப்படாமல் இருப்பது போக்குவரத்துச் செய்பவர்களுக்கு பலத்த பீதியை ஏற்படுத்தியுள்ளது.

## மண்வெட்டி வாங்க யாருமில்லை

சுழிபுரம் ஞாயிறு

வலிகாமம மேற்கு ஐக்கிய பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாஜத்தினர் தமது அங்கத்துவபலநோக்குச்சங்கம்கூட்டுறவுச்சங்கங்கள் ஆகியவற்றுக்கு மண்வெட்டிகளை வழங்கினர்.

ஆனல் மண்வெட்டியை எவருமே வாங்க முன்வரவில்லை. இதனல் ஒவ்வொரு சங்கங்களிலும் போதிய மண்வெட்டி விற்பனையாகாமல் இருக்கின்றன.

## ஜோர்தானில் ஈராக் அதிபர்

அம்மான், ஆக. 13

ஈராக் ஜனதிபதி ஆரிப், ஜோர்தானுக்கு விஜயம் செய்துள்ளார்.

ஜோர்தான் மன்னர் ஹுசெயினையும் மற்றும் முக்கிய தலைவர்களையும் சந்தித்து அவர் பேசுவார்.

முன்னதாக சிரியாவுக்குச் சென்றிருந்த ஆரிப், சிரியா ஜனதிபதி அட்டாஸியுடன் பேச்சுவார்த்தைகள் நடாத்தினர். பேச்சுவார்த்தைகளின் இறுதியில் இரு தலைவர்களும் விடுத்த இணைப்பறிக்கையில் 'மேற்கு ஆசியப் போரில் இழந்த அரபுப் பிராந்தியங்களை மீட்க அரபு நாடுகள் உறுதிபூண்டுள்ளதாக'த் தெரிவிக்கப்பட்டது.


## விளம்பரம்

தமிழ்நாடக எழுத்துப் போட்டி, 1967
முடிவுத் திகதி 31-8-1967
செயலாளர்,
இலங்கைக் கலைக்கழகம்,
135, தர்மபால மாவத்தை,
கொழும்பு—7
61

### மகாஜனக் கல்லூரி புதிய மாணவர்களைச் சேர்த்தல்: 1968

1968-ம் ஆண்டுத்தொடக்கத்தில் எட்டாம் [J S. C.] வகுப்பிலும் ஒன்பதாம் [O. L. Prep] வகுப்பிலும் சேர விரும்பும் மாணவர்கள் 28-8-67க்கு முன்னர் மனுச் செய்யவும். தகுதியுள்ள ஒருசிலரையே சேர்த்துக் கொள்ளமுடியும்.

அதிபர்.
மகாஜனக்கல்லூரி,
தெல்லிப்பழை 62

### கேள்வி விளம்பரம்
### கருநாவற்பற்று தெற்கு கிராமசபை

1வது. அம்பகாமம் புதுக்குடியேற்ற ரேட்டு, 2வது. முருகண்டிப் பகிரங்க மலகூடம், 3வது. பழைய முருகண்டிக்கிணறு முதலிய வேலைகளுக்கு பதிவுசெய்யப்பட்ட சொத்தருத்துக்காரர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பப் பத்திரங்களை அக்கிராசனரிடம் இருந்து 23-8-67க்குமுன் கேள்விப் பிணையாக 1வது வேலைக்கு ரூபா 60/ம், 2-வது வேலைக்கு ரூபா 30/ம், 3வது வேலைக்கு ரூபா 20/ம், ஒவ்வொரு வேலைக்கும் ரூபா 5/ம் பத்திரப்பணமாகவும் கட்டி பெற்றுக்கொள்ள[illegible]வண்டும். [பத்திரப்பணம் ரூபா 5/ம் திருப்பிக்கொடுபட மாட்டாது]

விண்ணப்பங்கள் யாவும் அக்கிராசனருக்கு 24-8-67 காலை 10 மணிக்கு முன் பதிவுத்தபாலில் அனுப்பிவைக்கப்படவேண்டும். அதே நேரத்தில் விண்ணப்பங்கள் உ. ஆ. உ. அதிபர் [வவனியா]வுக்கும் அனுப்பிவைக்கப்படவேண்டும். விபரங்கள் யாவும் கிராமசபை அலுவலகத்திலும் உ. ஆ. உ. அதிபர் அலுவலகத்திலும் அலுவலகநேரங்களில் அறியலாம்.

வே. பொன்னையா,
கி. ச. அக்கிராசனர்,
ஒலுமடு, மாங்குளம்.
66


## நிரந்தர வைத்திய அதிகாரி இல்லை

வவனியா, ஞாயிறு

கடந்த இருவருடங்களாக வவனியா பகுதிக்கு வைத்திய அதிகாரி நிரந்தரமாக நியமிக்கப்படவில்லை. இங்கிருந்தவைத்திய அதிகாரி ஓய்வுபெற்றதைத் தொ[illegible]ர்ந்து இந்நிலைமை நீடிக்கிறது.


4-வது வெற்றி வாரம்!

ரீங்ஸ்லி [கொட்டாஞ்சேனை]
விஜிதா [ஹட்டன்]
விஜயா [மட்டக்களப்பு]
பிளாஸா [வெள்ளவத்தை]
வெலிங்டன் [யாழ்ப்பாணம்]
மொடேர்ன் [பதுளை]

தென்னகமெங்கும் வெற்றி எட்டுத்திக்கு மெட்ட கொட்டுமுரசு கொட்டி 100 நாட்களுக்கு மேல் ஓடிய எழில் வண்ண ஓவியம்!
புதுமை நிறைந்த பொழுதுபோக்குச் சித்திரம்
மக்கள் திலகம் எம். ஜி. ஆர்.—சரோஜாதேவி
அசோகன் - நாகேஷ் - மனேரமா - ராமதாஸ்
ரி. ஆர். ராமச்சந்திரன் - மாதவி
நடித்த




ஏவி. எம். புரொடக்ஷன்ஸ்
# அன்பே வா
(ஈஸ்ட்மென் கலர்)
கதை, டைரெக்ஷன்: ஏ. ஸி. திரிலோகசந்தர்
இசை: மெல்லிசை மன்னர் எம். எஸ் விஸ்வநாதன்

ராஜா RAJAH
யாழ்ப்பாணம் JAFFNA.
தினசரி 2-30, 6-30, 930
ஓய்வுநாட்களில் 4 காட்சிகள்
ஏ. வி. எம், ராஜன்
கே. ஆர். விஜயா
நடித்த
மனம் ஒரு குரங்கு

நியூ காலிங்கன்
[இணுவில்]
தினசரி 6-30, 9-30 மணி
விடுமுறைதினங்களில் 2-30
ஜெய்சங்கர்-ஜெயலலிதா
நடித்த
நீ

மனேஹரா
[யாழ்ப்பாணம்]
தினசரி 6-30, 9-30
N.T. ராமராவ், ஜமுன,
[illegible]
நடித்த
பெண் நினைத்தால்

இறைவன் திருமேனியில்
சந்தனக் காப்பிட்டு
அலங்கரிக்க மிகவும் உகந்த
# பச்சை சந்தனம்
உடனுக்குடன் அரைத்துக்கொடுக்கிறேம்.
என்றும் எங்களிடம் கிடைக்கும்.
சுந்தரம் பிறதர்ஸ்
கோவில் அபிஷேகப்பொருட்கள்
மருந்துச்சரக்கு விற்பனையாளர்
(புதிய பஸ் நிலையதுக்கு அருகாமை)
73, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீனு தடுத்து வைத்துள்ள ரஷ்யக் கப்பலேயும் சிப்பந்திகளேயும் விடுவிக்கவும்

## சூ-என்-லாய்க்கு கொஸிஜின் கடிதம்

### சம்பவத்தின் விளேவுகளுக்கு சீனுவே பொறுப்பென எச்சரிக்கை

மாஸ்கோ, ஆக.13

**சீனுவுக்கு வடகிழக்கேயுள்ள மஞ்சள் கடலில் சீனு தடுத்துவைத்துள்ள சோவியத் கப்பலொன்றையும், அதன் காப்டனேயும சிப்பந்திகளேயும உடனடியாக விடுவிக்குமாறும, கப்பலே ரஷ்யாவுக்குத் திருமப அனுமதிக்குமாறும ரஷ்யப் பிரதமர் திரு. அலெக்ஸி கொஸிஜின், சீனப்பிரதமர் திரு. சூ-என்-லாய்க்கு எழுதியுள்ள கடிதமொன்றில் கோரியுள்ளார்.**

சீனப்பிரதமருக்கு திரு. கொஸிஜின் எழுதியுள்ள கடிதத்தில், சீனச்செங்காவலர் ரஷ்யக்கப்பலினுள் சென்று கதவுகளே உடைத்ததாகவும், தளபாடங்களேச்சேதப்படுத்தியதாகவும், கப்பற் சிப்பந்திகளின் உயிர்களுக்கு ஆபத்தான முறையில் நடந்து கொண்டுள்ளதாகவும் தமக்குத் தெரியவந்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

**உறவுகளே மோசமாக்கிறது**

இவ்வளவும் நடைபெறுகையில், சீன அதிகாரிகள் எதுவுஞ்செய்யாது பார்த்துக் கொண்டிருந்ததாகவும் இதிலிருந்து அவர்களும்இந்தத் தாக்குதலுக்குஉடந்தை என்பது தெளிவு என்றும் இந்த நடவடிக்கையினுல் ரஷ்யாவுடனுன பொதுவான உறவுகளேயும், விசேஷமாக வர்த்தக உறவுகளேயும் சீனு மேலும் மோசமாக்கியுள்ளதென்றும் பிரதமர்கொஸிஜினின் கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

**எச்சரிக்கை**

ரஷ்யக் கப்பலேத் தடுத்து நிறுத்தியுள்ள சம்பவத்தால் ஏற்படக்கூடிய விளேவுகளே சீனுவே பொறுப்பேற்க வேண்டியேற்படும் என்று ரஷ்யப் பிரதமர் சீனப்பிரதமருக்கு அனுப்பியுள்ளகடிதத்தில் எச்சரிக்கை செய்துள்ளார்.

இச்சம்பவத்தை ரஷ்யா 'மிகவும் பாரதூரமான' விஷயமாகக் கருதுவதாகத் தெரிகிறது.

## மாணவர்களிடையே அமைதியின்மை

### திரு. வி. வி. கிரி கருத்து

கல்கத்தா, ஆக. 13

''மாணவர்களுக்கிடையே நிலவும் அமைதியின்மையை நீக்க, நாட்டின் சமூக, பொருளாதாரப் பிரச்னேகளேத் தீர்க்கும் நடவடிக்கைகளில் அவர்களேப் பயன்படுத்துவது ஒரு சிறந்த முறையாகும்'' என இந்திய உப ராஷ்டிரபதி திரு. வி. வி. கிரி, கல்கத்தா பல்கலேக்கழகத்தின் பட்டமளிப்பு விழாவில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

மாணவர்கள் அரசியலில் அக்கறை எடுப்பதையிட்டு தமக்கு ஆட்சேபனே எதுவுமில்லேயென்று குறிப்பிட்ட உப ராஷ்டிரபதி, அவர்கள் அரசியலில் அதிகமாக ஈடுபடுவது விரும்பத்தக்கதல்ல என்றும் கூறினுர்.

## கல்கத்தாவில் துப்பாக்கிச்சூடு

### 4 பேர் கொலே

கல்கத்தா, ஆக. 13

கல்கத்தாவிலிருந்து 100 மைல் தொலேவிலுள்ள ஒரிடத்தில், அரிசி பற்றுக் குறையை எதிர்த்து ஆர்ப்பாட்டம் நிகழ்த்திய மக்கள் கூட்டத்தினர், வன்முறைச் செயல்களில் ஈடுபட்டதைத் தொடர்ந்து பொலிஸார் சுட்டதில் 4 பேர் கொல்லப்பட்டதாகவும், 30 பேர் காயமடைந்ததாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. நிலேமை இப்போது கட்டுக் கடங்கியிருப்பதாகக் கூறப்படுகிறது.

## சீன-ஹொங்கொங் எல்லே நிலேமை

ஹொங்கொங், ஆக. 13

ஹொங்கொங்கில், சீனுவுடனுன எல்லேயில் மேலதிக பிரிட்டிஷ் துருப்புகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

சென்றவாரம் சீன-ஹொங்கொங் எல்லேயில் நடைபெற்ற துப்பாக்கிப்பிரயோகத்தில், 5 ஹொங்கொங் எல்லேப் பொலிஸார் கொல்லப்பட்டனர். அத்துடன், எல்லேயைத் தாண்டி ஹொங்கொங்கினுள் புகுந்த சீனக் கும்பலொன்று, சில கடைகளே அடித்து நொறுக்கியது.

சீன-ஹொங்கொங் எல்லே நிலேமை மோசமானதாகவும், ஆபத்தானதாகவும் உள்ளதாக ஹொங்கொங் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

## சிரியாவுக்கும் ஈராக்குக்கும் டிட்டோ செல்கிருர்

### பின்னர் கெயிரோ திரும்புவார்

கெயிரோ, ஆக. 13

கெயிரோவுக்கு விஜயஞ் செய்து, ஐக்கிய அரபுக் குடியரசு ஜனுதிபதி நாஸருடன் பேச்சுவார்த்தைகள் நடாத்தும் யூகோஸ்லாவிய அதிபர் டிட்டோ, இன்று சிரியாவுக்கும், ஈராக்குக்கும் பயணமாகிருர்.

அவர் சிரியா, ஈராக் தலேவர்களுடன் பேச்சுவார்த்தைகள் நடத்திவிட்டு, அவற்றின் பலாபலன்களேயிட்டு நாஸருடன் கலந்தாலோசிக்க மீண்டும் புதன்கிழமையன்று கெயிரோ திரும்புவார்.

இதுவரை டிட்டோவும் நாஸரும் நடாத்திய பேச்சுவார்த்தைகளில், மேற்கு ஆசிய விவகாரத்துக்கு ஓர் அரசியல் தீர்வுக்கான முதல் நடவடிக்கை, போரில் கைப்பற்றிய பகுதிகளிலிருந்து இஸ்ரேல் துருப்புகள் வெளியேறுவதே என்பதையிட்டு இரு தலேவர்களும் பொதுவாக உடன்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

<u>உணவுக் கிளர்ச்சி மோசமடைகிறது</u>

## கேரளத்தில்பிரதமர் இந்திரா கொடும்பாவி எரித்தனர்

திருவனந்தபுரம், ஆக.13

திருவனந்தபுரத்தில் ஏற்பட்டுள்ள உணவுக்கிளர்ச்சியைத் தொடர்ந்துமார்க்ஸிய மாணவர்கள் பிரதமர் திருமதி இந்திராகாந்தியின் கொடும்பாவியைக் கொளுத்தி எரித்து சாம்பலே சாக்கடையில் கொட்டி சாம்பலுக்கு கிரியை நடாத்திஞர்கள்.

கேரளத்தில் உணவுக் கிளர்ச்சி அபாயமான கட்டத்தை நோக்கிக்கொண்டிருக்கிறது. கேரள கவர்னர் திரு.வி. விசுவநாதன், முதல் மந்திரி திரு. நம்பூதிரிபாத்தை அவசரமாக அழைத்துப் பேசிஞர். சட்ட பரிபாலனம், அமைதி நிர்வாகம் மோசமடைந்து வருவதைக் குறித்து கவர்னர் விசாரித்ததாகத் தெரிகிறது.

**மோதல்**

கம்யூனிஸ்ட் காவலர்களுக்கும், வேலேநிறுத்தம் செய்யும் மாணவர்களுக்குமிடையில் கண்ணூர்ஜில்லாவில் கடும் மோதல் நடைபெற்றுக்கொண்டிருப்பதாக தகவல் கிடைத்துள்ளது. இன்னும்பல பகுதிகளிலும் மோதல் நடைபெற்றுக் கொண்டிருக்கிறதாம்.

**கொடும்பாவி எரித்தனர்**

திருவனந்தபுரத்தில்மார்க்ஸீய மாணவர்களுக்கும் கம்யூனிஸ்ட் அல்லாதமாணவர்களுக்குமிடையில் கொடும்பாவிகொளுத்துவதுகுறித்து கடும் போட்டி ஏற்பட்டுள்ளது. கம்யூனிஸ்ட் அல்லாத மாணவர்கள் முதல்மந்திரி, உணவுமந்திரி திருமதிகௌரி தாமஸ் கொடும்பாவிகளேக் கொளுத்தினர்.

## கான்டன் பகுதியில்கலவரம்

### விளக்கு கமபங்களில் சடலங்கள்

பீகிங், ஆக. 13

சீனுவின் கான்டன் மாகாணத்தில் பலாத்காரம் தலேவிரித்தாடுவதாகப் பீகிங்கிலிருந்து கிடைக்கும் செய்திகள் கூறுகின்றன.

அம்மாகாணத்தில் ஒரே குழப்பநிலேயாக இருப்பதாகவும், பலாத்காரச் சம்பவங்களின்போது கொல்லப்பட்ட சிலரின் சடலங்கள் விளக்குக் கம்பங்களில் தூக்கிவிடப்பட்டுள்ளதாகவும் அச்செய்திகள் மேலும் தெரிவிக்கின்றன.

கோஷ்டிச் சண்டைகள் இப்போது சீனுவின் பல பகுதிகளுக்கும் பரவியுள்ளதாகவும் தெரிகிறது.

## ராஜஸ்தானில்உருவாகியுள்ள பழைய ராஜாக்கள் சங்கம்

### மான்யம் உறுதிப்படுத்த முயற்சி

புதுடில்லி, ஆக. 13

ராஜஸ்தானில், பழைய ராஜாக்கள் சிலர் கூடி, சங்கமொன்றை நிறுவியுள்ளனர். அது 'ராஜஸ்தான் ராஜாக்கள் சங்கம்' என அழைக்கப்படும்.

அரசாங்கம் தமக்கு அளித்துவரும் மான்யங்கள் தொடர்ந்து அளிக்கப்படுவதற்கான உத்தரவாதத்தைப் பெறுவதற்கு இச்சங்கம் தகுந்த முயற்சிகள்எடுக்குமெனத் தெரிகிறது.

**பி. எஸ், பி- தலேவர் கோரிக்கை**

இதற்கிடையில், பழைய ராஜாக்கள் தமக்கு அரசாங்கம் அளிக்கும் மான்யங்களேத் தாமாகவே குறைத்துக்கொள்ளவோ அல்லது முற்ருகக் கைவிடவோ முன்வரவேண்டுமென பிரஜா சோஷலிஸ்ட்கட்சித் தலேவரான திரு. கமாத், ராஜாக்களேக் கேட்டுள்ளார்.

ஒரு கூட்டத்தில் பேசுகையில், எந்த ஒருஒப்பந்தமும் சிரஞ்சீவித்தன்மை தாய்ந்ததோ அல்லது அழியாநிலேயுடையதோ ஆகாது என திரு? கமாத் மேலும் கருத்து வெளியிட்டிருந்தார். ராஜாக்களுக்கு அரசாங்கம் மான்யமளிப்பதாக உறுதியளித்துள்ள ஒப்பந்தத்தை மனதிற்கொண்டே அவர் இவ்வாறு குறிப்பிட்டிருந்தார்.

## சூடான் அரசாங்கத்தை கவிழ்க்க அமெரிக்க சி. ஐ. ஏ. சதி?

### பிரிட்டனும், மே: ஜெர்மனியும்உடந்தையாம்

கார்டூம், ஆக. 13

சூடான் அரசாங்கத்தைக் கவிழ்க்கும் சதித் திட்டத்தில் சூடானிலுள்ள அரசியற்கட்சிகள் சிலவற்றை ஈடுபடுத்தலெனெ, சி. ஐ. ஏ. பல்லாயிரக் கணக்கான ரூபாய்களேச் செலவழிப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்த சி. ஐ ஏ. சதித்திட்டத்துக்குப் பிரிட்டனும், மேற்கு ஜெர்மனியும் உதவி புரிவதாகவும் சூடான் தகவல் மந்திரி குற்றஞ்சாட்டியுள்ளார்.

சூடானில் தற்போதுள்ள அரசாங்கத்தைக் கவிழ்த்துவிட்டு, தன்னுடைய நெருக்கத்துக்குப் பணிந்து இஸ்ரேலுடன் ஓர் உடன்படிக்கைக்கு வரக்கூடிய அரசாங்கத்தை அதிகாரத்திலமர்த்த அமெரிக்கா முயல்வதாக அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

மேற்கு ஆசியப் போரைத் தொடர்ந்து, [illegible] அரசாங்கம் [illegible]ஞன தனது ராஜிய உறவைத் துண்டித்துக்கொண்டது என்பது இங்கு குறிப்பி...

## பீகிங்கில் புதிய ஆர்ப்பாட்டங்கள்

பீகிங், ஆக. 13

பீகிங்கில், மொங்கோலியாவுக்கு எதிராக ஆர்ப்பாட்டங்கள் நேற்றுப் புதிதாக நிகழ்ந்துள்ளன.

ஐந்து லட்சத்துக்கும் அதிகமான ஆர்ப்பாட்டக்காரர் [illegible] கோஷங்களேக் கிளப்பிக்கொண்டு, மொங்கோலிய தூதரகத்தைக் கடந்து சென்ற...

## அமெரிக்க விமானத் தாக்குதலில் 100 சிவிலியன்கள் கொலே

### வட வியட்னும் அறிவிப்பு

ஹனேய், ஆக. 13

அமெரிக்க விமானங்கள் ஹனேய்மீது நடாத்தியுள்ள கடைசி விமானத் தாக்குதலில், 100 சிவிலியன்கள் கொல்லப்பட்டனர் அல்லது காயத்துக்குள்ளாகினர் என வடவியட்னும்வட்டாரங்கள் தெரிவித்துள்ளன,

இத்தாக்குதலிஞல் பல வீடுகள் சேதப்படுத்தப்பட்டதாகவும் அவை மேலும் கூறியுள்ளன.

**9 விமானங்கள் சுடப்பட்டன**

தாக்கிய விமானங்களில் 9 விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டதாகவும், பலவிமானிகள் கைப்பற்றப்பட்டனரெனவும் வட வியட்னும் அறிவித்துள்ளது.

அமெரிக்காவின் இந்த...

...த்து நிறுத்துவதற்கு வேண்டிய நடவடிக்கைகளேஎடுக்குமாறு வடவியட்னும் பிற கம்யூனிஸ்ட் நாடுகளேக் கோரியுள்ளது.

<u>**இஸ்ரேல் ——**</u>

## பிடித்த பகுதிகளுக்கு பொலீஸ் காவல்

ஜெருசலம், ஆக. 13

மேற்கு ஆசியப் போரில் கைப்பற்றப்பட்ட பகுதிகளில் இராணுவக் கட்டுப்பாட்டை நீக்கிவிட்டு, அப்பகுதிகளில் பொலீஸாரை நிறுத்த இஸ்ரேல் முடிவு செய்துள்ளது.

ஜோர்தான் ஆற்றின் மேற்குக் கரைப் பகுதி காஸா பிராந்தியம், வடக்கு சினுய் ஆகிய பகுதிகளே பொலீஸாரின் அதிகாரத்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மணிவாக்கு**

நான் அஹிம்சையென்ற சாஸ்திரத்தைத் துருவித் துருவிப் பார்க்கும் ஓர் ஏழை ஆராய்ச்சியாளன். கண்ணுக்குத் தென்படாமல் மறைந்திருக்கும் அதன் ஆழங்கள் என் சக ஊழியர்களைத் தடுமாறச் செய்கின்றன.

—மகாத்மா காந்தி

ஈழநாடு

[illegible] National Tamil Daily
[illegible] EELANADU Jaffna
Post Box 49 Jaffna
Telephone: 359

யாழ்ப்பாணம் பிலவங்க ஆடி 29உ (14-8-67)

## தென் வியட்னும் தேர்தல்

தென்வியட்னுமில் அடுத்த மாதம் நடைபெறவிருக்கும் தேசியத் தேர்தலில், இப்போது ஆட்சிபீடத்திலுள்ள தென்வியட்னும் இராணுவ ஆட்சியாளர்கள் தலையிடுவதாகவும் தேர்தல் சுதந்திரமாக நடைபெறுமல் தடுத்து வருவதாகவும் செனட்டர் ரொபர்ட் கென்னடி குற்றஞ் சாட்டியிருக்கிருர். தென்வியட்னுமில் சுதந்திரமாகவும் நேர்மையாகவும் தேர்தல் நடைபெறுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று தென்வியட்னும் இராணுவ ஆட்சியாளரைக் கேட்டுக்கொள்ள வேண்டுமென அதிபர் ஜோன்ஸனை அமெரிக்க காங்கிரஸ் அங்கத்தினர் 57 பேர் கோரியுள்ளனர். இதேசமயம் 'வியட்னும் யுத்தம்' பற்றி 'ஆராய்ந்துவரும்' சுவீடனைச் சேர்ந்த ஜோன்தாக்மான் என்னும் ஒரு டாக்டர் வியட்னுமில் நச்சுப் புகைக்குண்டுகளை அமெரிக்கர் வீசி, 'சரித்திரத்திலேயே மிகமோசமான நச்சுக்குகையை வியட்னும் கிராமங்களில் அமெரிக்கா உருவாக்கியிருக்கிறது' என்று தெரிவித்திருக்கிருர்.

வியட்னும் பிரச்னை நீடித்துவரும் பெரும்பிரச்னை: தென்வியட்னுமை கம்யூனிஸ்ட் ஆதிக்கத்திலிருந்து காப்பாற்றுவதற்காக தென்வியட்னும்மக்களின் விருப்பத்தின் பேரில் தென்வியட்னும் அரசாங்கம் கேட்டுக்கொண்டதற்கிணங்க, அமெரிக்கா அங்கு உதவிக்காகச் சென்றதென்றும் தனது கடமையையும் பொறுப்பையும் அது கைவிட்டுவிட முடியாதென்றும் அமெரிக்க ஆட்சி பீடம் தெரிவித்து வருகிறது.

அமெரிக்க அரசாங்கம், தனது கடமையையும் பொறுப்பையும் நிறைவேற்றுவதற்காக, வியட்னுமில் 'காவு' கொடுத்த அமெரிக்கர்களின் தொகை குறைந்ததல்ல. இதற்காக உயிர்ப்பலி கொடுத்த வியட்னுமியரின் தொகையும் கொஞ்சமல்ல. தென்வியட்னுமில் ஏற்பட்ட கஷ்டநஷ்டங்களும் சிறிதல்ல. இதுதவிர அமெரிக்காவுக்குஏற்பட்டுள்ள பொருளாதாரச் செலவும் அதிகம். இத்தனைக்கும் அமெரிக்க அரசாங்கத்தின் வியட்னும் கொள்கைக்கு அமெரிக்காவிலேயே பலத்த எதிர்ப்பு உள்ளது; வெளிஉலகிலும் அமெரிக்காவின் பெயருக்கும் புகழுக்கும் இழுக்கு ஏற்பட்டுள்ளது.

அமெரிக்க அரசாங்கத்தின் நிலையும் தர்மசங்கடமானது. ஆழம்தெரியாமல் காலைவிட்டு அது அவதிப்படுகிறதென்றேகூடச் சொல்லலாம். தன்கௌரவத்துக்கு இழுக்கு ஏற்படாமல் வியட்னுமிலிருந்து வெளியேறுவதற்கு வாய்ப்புக் கிடைத்தால் அமெரிக்கா வெளியேறிவிடும்.

தென்வியட்னுமில் ஆட்சிப்பீடத்திலிருக்கும்இராணுவ ஆட்சியாளர் 'நல்ல வாய்ப்பு' ஏற்படவேவிட மாட்டார்கள் போல் தோன்றுகிறது. தென்வியட்னுமில் சுதந்திரமாகவும்நேர்மையாகவும்தேர்தல் நடந்து, மக்களின் அனுமதியுடன் ஆட்சிக்கு வரும் அரசாங்கம், வியட்னும் பிரச்னையில் சம்பந்தப்பட்ட வடக்கு வியட்னும், வியட்காங்கியர் ஆகியோருடன் நேரடிப்பேச்சுவார்த்தை நடத்தி ஒரு சமாதான முடிவுக்கு வந்தால் அமெரிக்காவுக்கு அதற்கு மேலும் வியட்னுமில் என்னவேலை இருக்கப்போகிறது?

இதற்கு வியட்னுமில் நேர்மையாகவும் சுதந்திரமாகவும் தேர்தல் நடைபெற வேண்டியது அவசியம்.

# வெண்ணெய் திரளும்நேரம் தாழியை உடைப்பது தர்மமா?

— ஆ. ம. செல்வத்துரை —

ஆயிரம் வருஷம் சென்றுலும் சிறுபான்மைத் தமிழரால் தீண்டாமையை ஒழிக்க முடியாது. தீண்டாமையை அனுஷ்டிப்போர் நினைத்தால் ஐந்து நிமிஷத்தில் ஒழித்துவிட முடியும். அந்த நிலையைத்தான் நாம் உருவாக்க வேண்டும். உருக்கமான பண்பான பேச்சுக்களும் எழுத்துக்களும் தான் சாஸ்வதமான பயனைக் கொடுக்கும். பலாத்காரம் ஒரு போதுமே பயனளிக்காது.

எமது உரிமைகளில் உயர்சாதி மக்கள் தலையிட்டால் நாம் பலாத்காரத்தையே பாவிக்க வேண்டும். இது எமது சமூகச் சரித்திரங் கண்ட உண்மை. எவரும் இதிலே பிழைசொல்ல முன்வரமாட்டார்.

ஆனுல், கோயில்களும் கடைகளும் எமது ஸ்தாபனங்கள் அல்ல. நாம் அவைகளைக் கண்ணெடுத்தும் பாராமலிருப்பதுதான் சுயமரியாதை. நாம் ஏகோபித்து அவைகளைப் பகிஷ்கரித்தால் மற்றவர்களை நினைக்கத்தூண்டும். அவர்களாகவே மனம்மாறி எம்மை உள்ளே அழைத்தால் மாத்திரமே நாம் போகவேண்டும். அது ஒரு நிரந்தர சமாதானத்தையும், சகோதரத்துவத்தையும் ஏற்படுத்தும்.

உதாரணமாக, செல்வச்சந்நிதி கோயிலில் சேரும் பணத்தில் எழுபத்தைந்து வீதம் சிறுபான்மைத் தமிழருடையதே. இவர்கள் ஏகோபித்துப் போகாது நின்று விட்டால் கோயிலதிகாரிகளை நிச்சயம் சிந்திக்கத் தூண்டாதா?

இந்தப் பலாத்காரப் புரட்சியைத் தூண்டிவிட்டவர்கள் மிகவும் புத்திசாலிகள். என்றுமே சமாதானம் ஏற்படாத இருபிரிவினர் நிரந்தரமாக இருந்தால் தான் தமது அரசியல் பிழைப்பு நடைபெறும் என்பது அவர்களுக்குத் தெரியும்.

இவர்களின் வலையில் சிக்குப்பட்ட சிறுபான்மைத் தமிழர்களுக்கு தமது இனத்தவர்களின் எதிர்காலம் எப்படி அமையும் என்பதே தெரியாது. இதனைத் தூண்டிவிட்டவர்கள், உயர் சாதியாரால் விரட்டப்பட்ட, எமது மக்களாகிய அகதிகளுக்கு ஒரு நேரககஞ்சியாவது கொடுக்கத் திராணி உடையவர்களா? எரிக்கப்பட்ட வீடுகளைக் கட்டிக் கொடுக்குஞ் சக்தி படைத்தவர்களா? எலும்பு நொருங்கிக்கிடப்பவர்களின் குடும்பங்களைக் காப்பாற்றும் பொறுப்பை ஏற்றுக்கொள்வார்களா? இற்றைக்கு இருபத்தைந்து வருடங்களுக்கு முன்னிருந்த நிலைமையையும் இன்றைய நிலையையும் வயது சென்றவர்களைக் கேட்டுத் தெரிந்துகொண்டால் எவ்வளவோ முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறதென்பதை ஆச்சரியத்துடன் தெரிந்து கொள்வார்கள்.

எமது மக்களில் தொண்ணுறு வீதமானேர் உயர்சாதி மக்களின் நிலங்களிலேதான் குடியிருக்கிருர்கள். இவர்களுடைய ஏற்றுத் தொழிலுக்கு அவர்களுடைய தென்னைமரங்களும பனை மரங்களுந்தான் உதவுகின்றன. கமத்தொழிலுக்கும் அவர்களுடைய தோட்டநிலங்களும், வியல் நிலங்களுந்தான் உதவுகின்றன. இந்த நிலையில் பலாத்கார நிகழ்ச்சிகள் எங்கே கொண்டுபோய்விடும்? நினைக்கவே நெஞ்சம் நடுங்குகிறது!

ஆலயங்களைத் திறப்பதற்காகச் சத்தியாக்கிரகப் பயமுறுத்தல் கொடிகட்டிப் பறந்தபோது நான் அதனையும் வன்மையாகக் கண்டித்தேன். சைவப்புலவர் வல்லிபுரம் அவர்களைத் தலைவராகவும், காலஞ்சென்ற கவிஞர் செல்லையா அவர்களைக் காரியதரிசியாகவும் கொண்ட சைவசமய சமரச சங்கத்தை நிறுவி அகில இலங்கை இந்து மாமன்றப் பிரமுகர்களைச் சந்தித்து நிலைமையை விளக்கினேம். அதன் பயனுக அவர்கள் ஒரு பொதுக்கூட்டத்தைக் கூட்டி சட்டநிபுணர் உயர் திரு. த. முத்துச்சாமிப்பிள்ளை தலைமையில் ஒரு சாத்வீகக்குழுவை உருவாக்கினுர்கள். முதலியார் செ. சின்னத்தம்பி அவர்கள் போன்ற பழுத்த சைவப் பெருமக்கள்பலர் அதில் அங்கம் வகிக்கிருர்கள். அது மிகுந்த துணிச்சலுடன் செயல்பட்டுவருவதை நானறிவேன். உயர்சாதி மக்களின் உள்ளத்தை உருக்கத்தக்கதான துண்டுப்பிரசுரங்களை லட்சக்கணக்கில் அச்சிட்டு வழங்கிவருகிருர்கள்.

எத்தனையோ ஆலய தர்மகர்த்தாக்களைக்கண்டு அவர்களை மனந்திரும்பச் செய்து கொண்டுவருகிருர்கள்.

மாபெருஞ் சைவப்பெருமக்கள் தீண்டாமையை ஒழிப்பதறகு முழுமூச்சாக

(5-ம் பக்கம் பார்க்க)

## நல்லைப்பதிவாழ் நம்குமரன்

— இ. நாகராஜன் —

வல்ல அசுர இனம்வீழ
வாகாந் தேவர் இனம்வாழ
வெல்லும் வீர வேலுடனே
விந்தை செய்யும் விறல்வேலன்
தொல்லைக் கடலில் துடிப்பவர்க்குத்
துணையே செய்து சுகமருள
நல்லைப் பதியில் உறைகின்ருன்
நாளும் நலத்தைத் தருகின்ருன்.

விஞ்ஞா னத்தின் வேகமொன்றே
மேன்மை என்றே விளக்கியந்த
விஞ்ஞா னத்துக் கடிபணிவோர்
வீழ்வார், அனைத்தும் பொல்லாத
அஞ்ஞா னத்தின் சின்னமென
அறிவோம்; ஆனுல் அடியவர்க்காய்
மெய்ஞ்ஞா னத்தின் விளக்கமென
விளங்கு வான்நம் வடிவேலன்.

ஓடும் காலம் ஓய்வற்றே
உருண்டே புதுமை ஊடுருவத்
தேடும் யாவும் தெளிவின்றி
சிந்தை சிதறச் சிறுமையிலே
வாடும், உண்மை வடிவாகி
வயங்கும் வடிவேல் முருகனையே
நாடும் உளத்தில் எந்நாளும்
நலவே நண்ணு திதையுணர்வீர்!

''கந்தா! கடம்பா கார்மயிலும்
கவினுர் வேலும் கொண்டவனே
எந்தாய்! அன்பே எமக்கென்றும்
ஏற்றங் காட்டும் இன்னருளே!
சிந்தை களிக்கும் திறலோனே!
தெய்வக் குமரா!'' எனஅழைக்கும்
நொந்த அடியார் உள்ளத்தில்
நுட்பப் பொருளாய் விளங்கிடுவான்

பட்டுப் பீதாம் பரங்கட்டிப்
பகட்டும் அணிகள் பலபூண்டு
கட்டுக் குலையா உடலழகைக்
காட்டிக், காலக் கோலத்தின்
துட்டக் குணத்தைத் துலக்கிவரும்
துட்டர் தம்மை அறிவான்உம்
இட்டம் என்றும் எளிமையுற
ஏற்றங் காண்பீர் அவனருளால்

கந்தன் கருணை கதுவிவரின்
கவலைப் பிணியும் கவ்விடுமோ?
சிந்தைக் குகந்த சீலனவன்
சினத்தால் சிறுமை அசுரர்கள்முன்
வந்த வழியே தெரியாது
மறைந்த மாயம் அறிந்துள்ளீர்
எந்தை அ[illegible]றும்
[illegible]ம் விட்டே இனி உய்வீர்!

## நாட்டிலும் நகரிலும்

கடந்த 11, 12-ம் திகதிகளில் யாழ்ப்பாணத்தில் ஓர் அதிசயம் நிகழ்ந்தது. வரவேற்கத்தக்க, விரும்பத்தக்க அதிசயம்.

இவ்விரண்டு தினங்களிலும் யாழ்ப்பாண குடாநாட்டிலுள்ள பஸ் பாதைகள் எல்லாவற்றிலும் வண்டிகள் 'டாண்' என்று நேரத்துக்கு ஓடின. பிரயாணிகள் கால் கடுக்க நீண்ட கியூ வரிசைகளில் நிற்க வேண்டிய அவசியம் ஏற்படவில்லை. சிறிய பழைய பஸ்ஸுகள் ஓடிய பாதைகளில் புதிய பெரிய பஸ்ஸுகள் ஓடின. சில பாதைகளில் பிரயாணிகள் இருந்தாலும் சரி, இல்லாவிட்டாலும் சரி வழக்கத்திற்கு மாருக கூடுதலான பஸ் வண்டிகளும் ஓடின.

என்ன சங்கதி என்று இவர் விசாரித்தார்.

நல்லூர் கொடியேற்றமா? சன்னதி திருவிழாவா? மடுமாதா உற்சவமா? சாச்சாய்! அப்படியொன்றுமில்லை. இந்த தெய்வங்களை விட இ. போ. ச. காரருக்கு பெரிதாகத் தோறும் ஒரு நடமாடும் தெய்வம் இ.போ.ச. தலைவர் சாட்சாத் ஆர். ரி. டி' சில்வா அவர்கள் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்ததே இந்த படாடோபங்களுக்கு காரணம் என்பதை இவர் அறிந்தார்.

உண்மையோ பொய்யோ, இவர் அறியமாட்டார். ஆனுல் மடுமாதா உற்சவத்துக் கென்று இங்கே அனுப்பப்பட்ட ஏழு விசேஷ பஸ்ஸுகள், யாழ்ப்பாண பஸ் சேவைகள் அதியற்புதமாக நிகழ்கின்றன என்பதை திரு. சில்வாவுக்கு நிரூபிப்பதற்காக இங்கேயே உபயோகிக்கப்பட்டன. என்றும் ஒரு வதந்தி உலவுகிறது.

இவர் தமிழ் பள்ளிக்கூடத்தில் படித்துக் கொண்டிருந்தகாலையில்சோதனைகாரன் வரப் போகிருர் என்றவுடனே மாணவ மாணவிகள் குளித்துமுழுகி, வெளுத்த சட்டை போட்டு, சிலேட் பலகைகளை கண்ணுடித் துண்டால் செதுக்கி மினுக்கி முருக்கமிலை போட்டு தேய்ந்து, 'டிப் டொப்'பாக காட்சியளிப்போம். பள்ளிக்கூடமும் பெருக்கி, துடைத்து டாம்பிகமாக காட்சியளிக்கும். அது போலத்தான் இ. போ. ச. தலைவர் வருகிருரென்றவுடன் யாழ்ப்பாண பஸ் சேவை பூரண பொலிவுடன் விளங்கியது. அவர் இங்கிருந்து புறப்பட்டு கொழும்பு சேருவதற்கு முன்னரே பழையபடி வேதாளம் முருக்க மரத்தில் ஏறிய' கதையாய் போய் விட்டது.

வருடத்தில் ஒரு நாளைக்கு மட்டும் மேளக் கச்சேரி, நடனக் கச்சேரி, வாணம், வேடிக்கை முதலியவற்றுடன் ஆடம்பரமான அலங்கார திருவிழா செய்துவிட்டு, மற்ற 364 நாட்களும் சட்ட விளக்கு கொளுத்துவதற்கு வகையின்றி கிடக்கும் கோயிலைப் போல, எப்பொழுதாவது ஒரு பெரும் புள்ளி விஜயம் செய்யும் சமயத்தில் 'பளிச்' என்று மின்னி விட்டு மீது நாட்களெல்லாம் மங்கி மடிந்து கிடப்பது தான் இ. போ. ச. வின் வேலையா?

ஒவ்வொரு நாளும் ஒரு பெரிய புள்ளி வருகிறதென்று நினைத்துக்கொண்டு பொதுமக்களுக்கு திருப்தி தரும் பூரண சேவை அழிக்க முடியாதா?

இங்குள்ள இ. போ. ச. ஊழியர்கள் செய்திருக்க வேண்டியது. பழைய பஸ் வண்டிகள், உதிரிப் பாகங்கள் தட்டுப்பாடு, முதலிய

[5-ம்பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மொழிப் பிரச்னையும் வெங்காயத் தட்டுப்பாடும்

## பார்லிமெண்டில் நடந்த சுவையான சூடான விவாதம்

கொழும்பு, ஞாயிறு

மொழிப்பிரச்னை, வெங்காயத் தட்டுப்பாடு, கால்நடைத் திருட்டு, ஜனப்பெருக்கம், ஒழுக்கக்கேடானசம்பவங்கள் இவற்றுடன் காரசாரமான சூடானவிவாதங்கள் ஜனப்பிரதிநிதிகள் சபையில் நடைபெற்றன.

ஜனப்பிரதிநிதிகள் சபையில் உபசபாநாயகர் திரு. எஸ் சி. ஷேர்லி கொரியாதலைமையில் வரவு-செலவுத்திட்டம் மீதான விவாதம் தொடர்ந்துநடைபெற்றபோது மேற்படி விஷயங்கள் 'பரிமாறப்'பட்டன

யு.என்.பி. அங்கத்தவரும் நாவலப்பிட்டி எம். பி.யுமான திரு. சந்திரா கருணரத்ன தேசிய அரசாங்கம் தேர்தலில் தோல்வியடைந்த அபேட்சகர்களுக்கு அரசாங்க கார்ப்பரேஷன்களிலும்அரசாங்க இலாகாக்களிலும் உத்தியோகங்கள் வழங்கப்படுவதைக் கண்டித்துப் பேசினார்.

தேயிலைத் தொழிலில்அன்னியர் தலையீடு இருப்பதாகச் சுட்டிக்காட்டிய அவர், இது குறித்து தமது கவலையைத் தெரிவித்தார். இது விஷயத்தில் கொலன்னுவ எம்.பி.யும் முன்னைநாள் அமைச்சருமான திரு.டி.பி. இலங்கரத்ன நடந்துகொண்ட முறைக்கு அவர் தமது பாராட்டைத் தெரிவித்தார்.

நாட்டில் நடைபெற்று வரும் ஒழுக்கக்கேடுகளைக் கட்டுக்குகொண்டு வருவதில் தீவிர முயற்சி எடுத்துவரும் பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரலைப் பாராட்டிய திரு. கருணரத்ன, லுனுவாவாடிவீட்டில் நடைபெற்ற சம்பவங்கள் பற்றியும்குறிப்பிட்டார்.

முல்கிரியா எம். பி. திரு. ஜோர்ஜ் ராஜபக்ஷ நிதி அமைச்சர் திரு.விஜயமானே லண்டன் சென்றிருந்தபோது தமது உடைஒன்றை வாங்க ரூ. 1,760 வரை செலவிட்டதுபற்றி சுட்டிக்காட்டி வெளிநாட்டுச்செலாவணி வீணாக்கப்பட்டுள்ளதாக எடுத்துக்கூறினார்.

வெங்காயத் தட்டுப்பாடு பற்றிப் பேசிய மீரிகம எம். பி. திருமதி. ஒபயசேகரா பிரதமருக்கு வெங்காயம் பற்றி ஒனறும் தெரியாது என்று குற்றஞ்சாட்டி, அரசாங்கத்தில் மேலும் பெண்கள் அங்கம் வகித்தால் அரசாங்கம் மேலும் நல்லவேலைகளைச் செய்யக்கூடியதாக இருக்குமெனக்கூறினார்.

கெஸ்பாவ எம். பி. திரு. சோமவீரசந்திரசிறீ, தேசிய அரசாங்கம் தமிழரசுக்கட்சியின் கோரிக்கைகளுக்கு மெல்லமாக இணங்கி வருவதாகக் குற்றஞ்சாட்டினார்.

உத்தேச மாவட்டசபை மசோதா பற்றி அவர் கண்டனம் தெரிவித்தார்.

சமூக சேவைகள் அமைச்சர் திரு. அசோகா கருணரத்ன, சுதந்திரக்கட்சி அங்கத்தவர்கள் காலஞ்சென்ற திரு. பண்டாரநாயகாவின் கொள்கைகளை உதாசீனம் செய்வதாகக் கண்டனம் தெரிவித்தார்.

கால்நடைகள் திருட்டுப் பற்றிக் குறிப்பிட்டுப்பேசிய ஹப்புத்தளை எம். பி. திரு. டபிள்யு. பி.ஜி.ஆரியதாசா, திருடிய மாடுகளே தாம் அடிப்பவை என இறைச்சிக் கடைக்காரர்களே ஒப்புக்கொண்டுள்ளார்களென்று குறிபிட்டார். இவர்கள்அரசாங்கத்தை நெருக்குவாரப் படுத்தினுல் இதை அரசாங்கம் ஒருவேளை அனுமதிக்கவும் கூடும் எனத்தாம் நம்புவதாகவும் அவர் கூறினார்.

தமிழரசுக் கட்சியினரை விடத் தமிழில் தமக்கு அபிமானம் அதிகம் எனக்குறிப்பிட்ட மூதூர் இரண்டாவது எம்.பி. ஜனாப் அப்துல் மஜீத், மகாவலி கங்கையை கந்தளாய்க்குத் திருப்ப வேண்டுமென்பதைக் கேட்க தமிழரசுக்கட்சியும் தமிழ்க் காங்கிரஸ் கட்சியும் மறந்துவிட்டதாகக் குறைகூறினார்.

சினிமா விமர்சனம்

# மனம் ஒரு குரங்கு

சபாஷ் சோ, சபாஷ்!

இந்த உலகத்தை என்ன மாதிரி அணுவணுவாகப் படித்து வைச்சிருக்கிறார் இந்தமனிதர் பிய்பிய்யென்று பிச்சுப்பிடுங்கி சக்கைபோடுகிறார், சக்கை!

''அந்தக் காலத்திலே நாமெல்லாம் காதலிச்சா கல்யாணம் செய் தோம்?' என்று தான் பெற்றமகன் 'சோ'விடம் பாலையா கேட்டதும்' உன்காலத்திலே காதலிக்கிற மாதிரியா மனுஷன் இருந்தான்'' என்று 'சோ' கொடுக்கும் 'சாம்பிள்' ஒன்று மட்டும் போதாதா, 'மனம் ஒரு குரங்கு' எப்படியிருக்கும் என்பதற்கு!

காட்சிக்கு காட்சி ஒரே நகைச்சுவை - வெறும் பொழுது போக்கு நகைச் சுவையல்ல' சிந்தனைக்கு விருந்து.

நவநாரீமணிகளின் போலி வேஷத்தை, பெரிய மனிதர்களின் போலித்தனமான வாழ்க்கையை - ஏன் இந்த உலகத்தில் வாழும் போலிகள் அத்தனைபேரின் உண்மை ரூபத்தையுமே அம்பலமாக்குகிறார், 'சோ'. தான் சிறந்தவொரு நகைச்சுவை நடிகர் என்பதை நிரூபிக்கும் வக்கீலான சோ, தான் ஒரு சிறந்த கதாசிரியர், வசனகர்த்தா என்பதையும் நிரூபித்து விடுகிறார்!

ஏழை காய்கறி விற்கும் மாரியாக விருந்த கவர்ச்சிக் கன்னி விஜயாவை பெரிய நடிகையாக வருமளவுக்கு ஆக்கி விடுகிறார். ஏ. வி. எம். ராஜன். தன்காதலன் முத்துராமன்அன்பைப்பெறுவதற்காக பிறகும் ஏழை மாரியாக வர விரும்புகிறார். ஏழைமாரி சினிமா நடிகையாகலாம், ஆனுல் சினிமா நடிகை மாரியாக முடியாது என்ற தத்துவத்துடன் படம் முடிகிறது. மரத்துக்கு மரம் தாவும் குரங்கு போன்ற மனம் என்ற தத்துவத்தையும் சித்தரித்துக் காட்டுகிறார் சோ.

விஜயா நடிப்புப்பற்றிச் சொல்லவும் வேண்டுமா? படத்துக்குப்படம் நடிப்போடு சங்கமமாகிக் கொண்டே போகிறார். ஆனுல் ஆபாசக்கவர்ச்சி...,

ஏ. வி. எம். ராஜன் பல காலத்துக்குப் பிறகு வந்து பரவாயில்லாமல் நடித்திருக்கிறார், பாலையாவரும் காட்சியெல்லாம் ஒரே சிரிப்பு. முத்துராமன்-'சோகத்திலகம்' என்று

# ''பட்டின சபை....

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

கிடைப்பதில்லை. ஆகையால் பட்டணசபை சட்டத்தை திருத்தியமைக்கும்படியும், தேசாதிபதி ஒரு சபையை நியமித்து அந்தச் சபையின் அறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க மந்திரிக்கு சந்தர்ப்பம் வழங்கப்படவேண்டும்.

தற்பொழுதுமாகாண அதிகாரிகள்மூலம், பட்டண சபைகளின் நிர்வாக விஷயங்கள் தொடர்பு கொள்ளப்படுவதால் தாமதம் ஏற்படுகிறது. ஆகையால், உள்ளூராட்சி ஆணையாளருடன் நேரடியாயக இவ்விஷயங்களை தொடர்புகொள்ள நடவடிக்கையெடுக்கவேண்டும்.

# வெண்ணெய்.....

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

வேலைசெய்ய வெளிக்கிட்டிருக்கும் இந்தத் தருணத்தில் அந்தப் பெருமக்களின் உள்ளமே உடையத்தக்க காரியங்களில் நாம் ஈடுபடுவது நல்லதல்ல ''வெண்ணெய் திரண்டுவருந் தருணத்தில் தாழியை உடைப்பது தர்மமா?'' ஓராயிரம்வருடம் பொறுத்திருந்த நாம் இன்னுஞ் சில மாதங்களுக்குப் பொறுத்திருக்க முடியாதா?

அகில இலங்கை இந்து மாமன்றத்தில் அங்கம் வகிக்கும் பிரமுகர்கள்தான் பத்து வருடங்களுக்கு முன் நல்லூர்க் கந்தசாமி கோயிலுள்ளிட்ட இருபத்தொரு ஆலயங்களைத் திறந்து வைத்தார்கள். அந்த அற்புதமான சம்பவத்தை ''பசித்தநாய்க்கு எலும்புத்துண்டு'' என்ற தலையங்கத்திலே வர்ணித்து கிண்டல் செய்த புத்திசாலிகள்தான் இன்று ஆலயக் கதவுகளை உடைத்து பக்தி வெள்ளத்தைப் பாய்ச்ச வெளிக்கிட்டிருக்கிறார்கள்.

குறித்த அற்புதமான, ஆனந்தமான சம்பவம் எப்படி நடந்ததென்பதைப் பொதுமக்கள் மறந்திருக்கக் கூடும். அதனை, நெருப்புடன் விளையாடும் இந்தத்தருணத்தில் நினைவுபடுத்திக்கொள்வதால் சிறுபான்மைத் தமிழரும், பெரும்பான்மைத் தமிழரும் மிக்கபயனடைவர் என்பது எனது தாழ்மையான அபிப்பிராயம்.

சிறுபான்மைத் தமிழ்ச் சகோதரர்களே, சில மாதங்களுக்குப் பொறுமையாக இருங்கள். பெரும்பான்மைத் தமிழ்ப் பெருமக்களே நீங்கள் செய்வது சரிதானு என்பதை நெஞ்சிலே கைவைத்துச் சிந்தித்துப் பாருங்கள். யாழ்ப்பாண நகரிலே நடைபெறுங்காரியங்களை உங்கள் கிராமங்களிலும் செய்வதற்கு ஏன் தயங்குகிறீர்கள்?

# நாட்டிலும நகரிலும

[4 ம் பக்கத் தொடர்ச்சி]

வசதியீனங்களை தலைவருக்கு எடுத்துக் காட்டும் நோக்கமாக வழக்கம் போல பஸ் சேவையை நடத்திருக்க வேண்டியது. இதை விட்டு விட்டு அவர்கள் தலைவருக்கு ஆலவட்டமும் தீவட்டியும் பிடித்தார்கள்.

இதெல்லாவற்றையும் கண்டு புளகாங்கிதமடைந்த திரு. சில்வா யாழ்ப்பாண பஸ் சேவையில் குற்றமொன்றுமில்லை, இங்குள்ள வீதிகள் தான் சரியில்லை என்று ஒரு மணிவாக்கை அவிழ்த்து விட்டார்.

ஆடத் தெரியாத.... கூடம் கோணல் என்றாளாம்!!

— வழிப்போக்கன்

இனிக்கூறலாமே!

பாட்டுக்கள் 'பரவாயில்லை நாகரீக மோகத்துக்கும், போலித்தனத்துக்கும் அடிமையாக இருக்கவிரும்புகிறவர்களெல்லாம் பார்க்க வேண்டிய படம் 'மனம் ஒரு குரங்கு'

யாழ்ப்பாணம் ராஜா தியேட்டரில்இப்படம் ஓடிக் கொண்டிருக்கிறது. ...

# தீப்பிடித்து இளம்பெண்ணும் சிறுமியும் மாண்டனர்

யாழ்ப்பாணம், திங்.

ஆடையில் தீப்பற்றியதால், யாழ்ப்பாணப் பகுதியில் இரு பெண்கள் மரணமானார்கள். எரிகாயங்களுடன் யாழ்ப்பாண ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட இரு பெண்களும் அங்கு மரணமானார்கள்.

ஆனைக்கோட்டையைச் சேர்ந்த அருணி தனபாலசிங்கம் மனைவி ராஜலட்சுமியின் (வயது 21) மரணவிசாரணையின்போது, அடுப்பிற்குள் மண்ணெண்ணை ஊற்றியபோது ஆடையிலும் தெறித்ததாகவும், தீ மூட்டியபோது திடீரென ஆடையில் தீப்பற்றியதாகவும் கூறப்பட்டது.

விசாரணையின்போது தனபாலசிங்கம் கூறியதாவது: சம்பவம் நடந்த தினம் நண்பகல் நான் குளித்துக் கொண்டிருந்தேன். அடுக்களையிலிருந்து மனைவியின் அபாயக் குரல் கேட்டது நான் ஓடிச் சென்று பார்த்தபோது மனைவியின் உடையில் தீப்பற்றிக்கொண்டிருந்தது. கைகளால் தீயை அணைத்தேன். மைத்துனர் தண்ணீர் கொண்டுவந்து மனைவியின் உடலில் ஊற்றினார்.

அடுப்புக்குள் மண்ணெண்ணை ஊற்றியதாகவும், அப்போது கவுனிலும் மண்ணெண்ணை தெறித்ததாகவும் தீமூட்டியபோது திடீரென ஆடையில் பிடித்ததாகவும் மனைவி கூறினார். நான் தீயை அணைத்தபோது எனது கைகளிலும் எரிகாயம் மேற்பட்டது. உடனடியாக ஆஸ்பத்திரியில் அனுமதித்தேன். திருமணத்தின் பின் நானும் மனைவியும் மகிழ்ச்சியாக வாழ்ந்துவந்தோம்.

சங்கானையைச் சேர்ந்த அரியகுட்டி திருமேனி மகள் சரோஜினிதேவியின் [13 வயது] மரணவிசாரணையின்போது, தேநீருக்கு அடுப்புப் பற்றவைத்தபோது பாவாடையில் தீப்பிடித்ததாகக் கூறப்பட்டது.

திருமேனி சாட்சியமளிக்கையில் கூறியதாவது: சம்வம் நடந்த தினம் காலையில் என் மகள் அடுக்களையில் தேநீர் தயாரித்துக் கொண்டிருந்தார். திடீரென ஓர் அபாயக் குரல் கேட்டது. நான் அடுக்களைக்கு அருகில் இருந்தேன். நானும் மனைவியும் உடனே அடுக்களைக்குச் சென்றோம். பாவாடையில் தீயை அணைக்க நான் தண்ணீர் ஊற்றினேன. பின்னர் காரில் மானிப்பாய் ஆஸ்பத்திரிக்கும், அங்கிருந்து யாழ்ப்பாண ஆஸ்பத்திரிக்கும் கொண்டுசென்றேன். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட பின் மரணமானாள்.

மரண விசாரணை நடத்திய மரணவிசாரணை அதிகாரி திரு. என்.இராசநாயகம் விபத்தினுல் ஏற்பட்ட மரணங்கள் எனத் தீர்ப்பளித்தார்.

திருமலை செய்திகள்:

# '21 தினத்துக்குள் முடிவில்லாவிட்டால் வேலை நிறுத்தத்தில் குதிப்போம்'

## இலங்கை வர்த்தக ஊழியர்சங்க கிளைஎச்சரிக்கை

திருகோணமலை, ஞாயிறு

திருமலைத் துறைமுகத் தொழிலாளர்கள் எந்தச் சங்கத்தில் அங்கம் வகித்தாலும் அவர்களது தலைவர்கள் என்ன கூறினுலும் கொடுமையளிக்கும் கொந்தராத்துக்காரர்களின் திட்டத்தை ஒழித்து, சகல தொழிலாளர்களும் ஒன்றுபட்டுப் போராடவேண்டும். வேலைநீக்கம் செய்யப்பட்ட சகல தொழிலாளர்களையும் வேலைக்கு அமர்த்தும் பொருட்டும், சகல பிரச்னைகளையும் சுமுகமாகத் தீர்க்கும்பொருட்டும் அரசாங்கத்திற்கு இலங்கை வர்த்தக ஊழியர் சங்கம் 21நாட்கள் தவணை கொடுத்துள்ளது. இதற்குள் ஒரு முடிவு ஏற்படாவிட்டால் ஒரு பெரும் வேலைநிறுத்தம் நடக்கும்.'

இவ்வாறு இலங்கை வர்த்தக ஊழியர் சங்க திருமலைக் கிளை தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது.

### நாடகம்

திருமலை நாமகள் நாடக மன்றத்தினர் தமது வெற்றித் தயாரிப்பாகச் 'சாவே நீவா' என்றமுசகநாடகத்தை விரைவில் அரங்கேற்றவிருக்கிறார்கள். இந்நாடகத்தில் திருமலையின் இளம் நடிகர்கள் பங்குபற்றுகின்றனர்.

### பிணையில் சென்றனர்

திருகோணமலை கூட்டுறவு வங்கி மனேஜர் திரு. பத்மநாதனைத் தாக்கியதாக கூட்டுறவு வங்கியைச் சேர்ந்த அறுவர் மனேஜரின் புகாரைத்தொடர்ந்து திருமலைப் பொலிசாரால் கைது செய்யப்பட்டு திருமலைப் பதில்நீதிபதி ஏ, ஸி. கனகசிங்கம் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டபோது நீதிபதி எதிரிகளை தலா ரூபா 250 பிணையில் செல்லும்படி உத்தரவிட்டு வழக்கை ஒத்தி வைத்தார்.

### மாணவர் சிரமதானம்

திருகோணமலைப் பெருந்தெரு மெதடிஸ் மிஷன் தமிழ்க்கலவன் பாடசாலை மாணவர்கள் தமது ஆவணி விடுதலையை பொதுநலப் பணியில் ஈடுபடுத்தியிருக்கிறார்கள். இவர்கள் வணக்கத்துக்குரிய பிதா பிறேடி தலைமையில் உப்புவெளியில் நடாத்தும் வேலை அனுபவ விடுதியில் தங்கியிருந்து கல்லரிதல், பாதையமைத்தல் போன்ற வேலைகளைச் செய்கின்றார்

[8-ம் பக்கம் பார்க்க]

# இன்றைய பலன்

14-8-67

திங்கட்கிழமை

[ஆடிமாதம் 29-ந்திகதி]

நட்சத்திரம் - அனுஷம் பி.ப. 4-37வரை — மேல் கேட்டை

திதி-நவமி பி.ப. 2-04 வரை—மேல் தசமி

சுபநேரம் -12-04-1-34

ராகுகாலம் 7-34-9-04

மேடம்-காயம்ஏற்படும் கவனம்

ரிஷபம்- பரவச நிலை

மிதுனம்- தொழிலில் பாதிப்பு

கடகம்- பழைய கடன் வருதல்

சிங்கம- வீண்பிரயாசை

கன்னி- பொதுலாபம் உண்டு

துலாம்- தளர்ச்சியடைதல்

விருச்சிகம்- கலகத்துக்கு இடங்கொடேல்

தனுசு- பெண்களால் நன்மை

மகரம் - தன்கையே தனக்குதவி

கும்பம- பூமிதிருத்தி நாட்டம்

மீனம்- சென்றது கிடைக்கும்

—சோதிடக்கலாநிதி—

திருமலை வேலுப்பிள்ளை

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# 'மாணவர் ஒழுங்கீனத்துக்கு ஆன்மீகக் கல்வி இல்லாததே காரணம்''

## சிவபாத சுந்தரனார் நினைவுவிழாவில் யாழ். இந்துக்கல்லூரி அதிபர்

சுழிபுரம், ஞாயிறு

''ஆங்கிலநாட்டு அறிஞர் ஷேக்ஸ்பியர், தமிழ்நாட்டு புலவர் பாரதி போன்றோர் வரிசையில் நமது நாட்டுப் பெரியார் ஸ்ரீலஸ்ரீ சிவபாத சுந்தரனாரும் சேர்க்கப்படக் கூடிய ஓர் அறிஞர்'' என்று யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி அதிபர் திரு. என். சபாரத்தினம் சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரி முன்னாள் அதிபரும், அறிஞருமான ஸ்ரீலஸ்ரீ சிவபாதசுந்தரனாரின் பதினைந்காம் ஆண்டு நினைவு நினைவு விழாவுக்கு தலைமை வகித்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

இவ்விழா சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி பழைய மாணவர்களால் அக்கல்லூரி மண்டபத்தில் கொண்டாடப்பட்டது.

திரு. என். சபாரத்தினம் மேலும் பேசுகையில், ''ஆன்ம ஈடேற்றமற்றகல்வி நடைமுறையில் இல்லாதது ஒரு பெரும் குறையாகும். இன்று நாட்டில் வாழும் இளைஞர்களிடம் ஒழுங்கீனமும். வெறுப்புணர்ச்சியும் தலை தூக்கி நிற்பதற்கு எமது பாடசாலைகளில் ஆன்ம ஈடேற்றத்துற்கு வேண்டியதும் நல்வழிப்படுத்தக்கூடியதுமான கல்விப்போதனை இல்லாதது ஒரு காரணமாகும். இதனை அறிந்தே எமது பெரியார் எமது மாணவர்களுக்கு ஆரம்பகாலத்திலேயே சமயக் கருத்தைப் புகட்ட முயன்றார். எல்லா சமயங்களின் நோக்கமும் நல்வழிப்படுத்துவதேயாகும் மாணவர் நிலைமையை அறிந்து அவர்களுக்குக் கல்வி புகட்டும் உத்தமனாக விளங்கிய மேதை எமது குரு சிவபாதசுந்தரனாவர் என்றார் திரு. நா. சேனாதிராசா பேசுகையில், ''மேல்நாட்டவர்கள் சிவபாதசுந்தரனாரின் நூலை வாங்கிப் படிப்பதில் மிகுந்த ஆவலுடையவர்களாக இருக்கின்றார்கள். சமய சம்பந்தமான விளக்கங்கள் மிக நுட்பமாக இருப்பதை அவருடைய நூல்களில் இருந்து கண்டுள்ளார்கள். மேல்நாட்டவர் போற்றும் அளவுக்கு சிவபாதசுந்தரனாரின் கருத்துக்கள் பரவிவருகின்றன'' என்று கூறினார்.

திரு. சு. சண்முகரத்தின சர்மா, சோ இளமுருகனார் அ. கந்தையா உட்பட மற்றும் பலரும் பேசினர்.

### வாலிபர் சிரமதானம

அராலி, ஞாயிறு

நூற்றுக்கு மேற்பட்ட வாலிபர்கள் இங்குள்ள பயிர்ச்செய்கைக் குழுவின் வேண்டுகோளுக்கிணங்க ஒரு நீர்ப்பாசனக் குளத்தைத் திருத்தி, மழைநீரைச் சேகரித்துவைக்கும் முயற்சியில் ஈடுபட்டிருக்கின்றனர். இக்குளத்தில் நீர் நிறைந்திருக்கும் வரை அதன் அண்மையிலுள்ள கிணறுகளில் நீரூற்று குறையாமலிருப்பதோடல்லாமல், கோடைகாலப் பயிரினமாகிய வெங்காயம், உருளைக்கிழங்கு, நிலக்கடலை போன்ற பயிர்கள் பயிரிடவும் இது உதவியாயிருக்குமென கமத்தொழிற்பகுதியினர் ஆலோசனை கூறியுள்ளார்கள் பகலில் வர்த்தகத் துறைகளில் கடமையாற்றும் வாலிபர்கள்கூட மாலை ஐந்து மணிக்கு வந்து இக்குளத்தில் இரவு எட்டுமணி வரை சிரமதான வேலை செய்கிறார்கள்.

### இரண்டாமிடம பெற்றது

ஊர்காவற்றுறை, ஞாயிறு

சமீபத்தில் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற விவசாயகைத் தொழில் காட்சி அறிவுப் போட்டியில் சரவணை காந்தி இளைஞர் விவசாயக்கழகம் இரண்டாம் இடத்தைப் பெற்றுள்ளது. செல்வன் கே. மகாதேவன் செல்வன்: பேரம்பலம். சல்விசா. தேவருக்மணி ஆகியோர்பங்குபற்றினர்

### 'மல்லாகம் புகையிரத நிலையத்தை விஸ்தரியுங்கள்'

சுன்னாகம், ஞாயிறு

'மல்லாக புகையிரத நிலையம் வேண்டியவசதிகள் அற்ற நிலையில் இருக்கிறது. இதனால் பிரயாணிகள் பலவித சிரமங்களுக்கும் உள்ளாக வேண்டியிருக்கிறது மல்லாகம் புகையிரத நிலையத்தை விஸ்தரிப்பது மிக முக்கியம்''.

இவ்வாறு மல்லாகம் புகையிரதபிரயாணிகள், ரயில்வே மந்திரிக்கு ஒரு மகஜரை அனுப்பிவைத்துள்ளனர்.

### பீடிப்புகையிலை உற்பத்தியாளர் அவதி

சுழிபுரம், ஞாயிறு

இப்பகுதியில் பயிரிடப்பட்ட பீடிப்புகையிலையை விற்பனைசெய்ய முடியாது உற்பத்தியாளர்கள் பெரும் அவதிக்குள்ளாகியுள்ளனர். மாதங்கள் ஐந்துக்கு மேலாகியும் தாம் உற்பத்திசெய்த புகையிலையை அரசாங்கத்துக்கோ, அன்றி தனிப்பட்ட கம்பெனிகளுக்கோ விற்பனை செய்ய முடியாமல் இருப்பதால் தமது உழைப்பு முயற்சி வீண் விரையமாகிவிட்டதெனக் கவலை

# துன்னாலை தாக்குதல்வழக்கு

## 3 எதிரிகள் விடுதலை; இருவர் குற்றவாளிகள்

வல்வெட்டித்துறை, ஞாயிறு

''சின்னமேளம் ஆடி முடிந்ததும் என்னை 1-ம் எதிரி ஆசூர் துரத்திக் கொண்டுவந்து வாளால் கையில் வெட்டினார். 2-ம் எதிரியான மகேசன் பின்புறத்தில் கொட்டனால் அடித்தார். நான் உடனே கீழே விழுந்து விட்டேன்'' என்று வைத்தி இராசதுரை என்பவர் தாக்குதல் வழக்கொன்றில் குறுக்குவிசாரணையின் போது கூறினார்.

இவ்வழக்கில் துன்னாலை தெற்கைச்சேர்ந்த வைத்தி இராசதுரையையும் அவருடன் நின்ற ஜெயராசன், திரவியம் என்பவர்களையும் அயல் கிராமத்தைச்சேர்ந்த ஆசூர், மகேசன், அருமைத்துரை, சின்னத்துரை இராசதுரை ஆகியோர் இவ்வருடம் சித்திரை மாதம் 23-ந் திகதி வாளால் வெட்டியும், அடித்தும் படுகாயம் உண்டுபண்ணியதாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது. இவ்வழக்கு பருத்தித்துறை மாஜிஸ்திரேட் திரு. கே. விக்னராசா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இராசதுரை தொடர்ந்து சாட்சியமளிக்கையில், சம்பவம் நடந்த தினத்தன்று துன்னாலை தெற்கு கந்தசாமி கோவில் திருவிழாவுக்கு

(7-ம் பக்கம் பார்க்க)

### உபதலைவர் தெரிவு

உரும்பராய், ஞாயிறு

உரும்பராய் பட்டினசபை உபதலைவர் தெரிவு எதிர்வரும் 19-ந் திகதி நடைபெறவிருக்கும் சபையின் 2-வது கூட்டத்தில் நடைபெறும்.


## 50 சதத்துடன் விரைவில் செல்வந்தராகுங்கள்

ஒவ்வொரு வாரமும், நூற்றுக்கு மேற்பட்டவர்கள் விரைவில் செல்வந்தராகி விடுகின்றனர்.



அடுத்து உங்கள் முறை ஆகலாம்

50 சதத்திற்கு நீங்கள் புத்தம் புதிய கார் ஒன்றையும் பெருந் தொகைக்கான காசோலையையும் பெறலாம்.

அதிர்ஷ்டத்தை எதிர்பார்த்து இராதீர் உங்கள் தேசிய லொத்தர் சுவீப் டிக்கெட்டுகளை இன்றே வாங்குங்கள்.




உங்களுடைய அடுத்த பெரிய சுவீப்புகளில்

முதல் பரிசு பெறும் அதிர்ஷ்டசாலிகளுக்கு அவர்களின் பரிசுத் தொகையிலிருந்து கீழ்க்காணும் கார்களை வாங்கச் சந்தர்ப்பம் அளிக்கப்படும்.

சீட்டிழுப்பு இல. 155 தேதி 17-8-67 புத்தம் புதியஹோல்டன் ஸ்பெஷல் கார் ரூ. 17,350/ O



சீட்டிழுப்பு இல. 155

சீட்டிழுப்பு இல 156 தேதி 24-8-67-புத்தம் புதிய ஒப்பெல் ரெக்கோர்ட் ஸ்டேசன் வகன் ரூ. 21,600/ O



O இவை தீர்வை உள்ளடங்கிய சாதாரண கம்பெனிப்பட்டியல் விலைகளாகும்.

சீட்டிழுப்பு இல. 156

இந்தக் கார்களை வாங்குவதற்கான சந்தர்ப்பம் சீட்டிழுப்புக்குப் பின் 14 நாள்களுக்கு மட்டும் வழங்கப்படும்.

ஞாபகத்திலிருக்கட்டும்:-

நீங்கள் வாங்கும் ஒவ்வொரு தேசிய லொத்தர் சுவீப் டிக்கெட்டும், அதிர்ஷ்டத்தின் வாயிலுக்கு உங்களை அழைத்துச் செல்கிறது.

50 சதம் முதலீடு செய்து பெரும் செல்வம் தேடுங்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நொக்கவுட் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டி

# பாடும்மீன், சன்றைஸ் 'பைறெட்ஸ்-7' சாம்பியன்கள்

யாழ்ப்பாணம், திங்.

யாழ்ப்பாணம் பாஷையூர் அந்தோனியார் விளையாட்டுக் கழகத்தின் உள்ளூர் 'நொக்கவுட்' உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் 'பாடும் மீன்' கோஷ்டி, 'சண்றைஸ்' கோஷ்டி, 'பைறெட்ஸ் 7' கோஷ்டி ஆகிய மூன்றும் சாம்பியன்களாகின. 'பைறெட்ஸ் 7' இரு பிரிவுகளிலும் சாம்பியன் கேடயத்தை தட்டிக் கொண்டது

முதல் இரு கோஷ்டிகளின் சாம்பியன் போட்டிகளும் போட்டி ஆரம்பமாகி முடியும் வரையும் அருமையாகவே இருந்தன. இப்போட்டி ஆரம்பமாகிய 3 நிமிடத்தில் பாடும் மீன் கோஷ்டியின் முன்னனி வீரரான அ. ஜோர்ஜ் அருமையாக ஒரு கோலை விளாசினர். இடைவேளையின் பின்னர் நடைபெற்ற போட்டியில் 'சன்றைஸ்' கோஷ்டி முன்னனி வீரரான வ. யோகராசா மின்னல் வேகத்தில் ஒரு கோலைப் போட்டார். இப் போட்டியில் இரு கோஷ்டிகளின் கோல்காப்பு வீரர்களின் சுறுசுறுப்பான ஆட்டம் பாராட்டக் கூடியதாக விருந்தது. இப்போட்டி முடிவில் இரு கோஷ்டியும் தலா 1—1 கோல்கள் பெற்று சமமாக ஆட்டத்தை முடித்தனர்.

திரு. எம். ஆர். மகாராஜா மத்தியஸ்தம் வகித்தார்.

'ஏ' பிரிவில் பாடும் மீன் சன்றைஸ் கோஷ்டிகளும். 'பி' பிரிவிலும், 'சி' பிரிவிலும் 'பைறெட்ஸ் 7' கோஷ்டியும் பிரிவுச் சாம்பியன்களாக தெரிவு செய்யப்பட்டன.

வண. பிதா திரு. கே. பி. சந்தியாப்பிள்ளை பரிசில்களை வழங்கினர். திரு. ஏ. அன்டசன் நன்றியுரை கூறினர். [வி. நி]

சுன்னுகம்

## பொன். கந்தையாபாடசாலை விளையாட்டுப்போட்டி

யாழ்ப்பாணம், திங்கள்

சுன்னுகம்கோட்டைக்காடு பொன. கந்தையா அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையின் வருடாந்த விளையாட்டுப்போட்டிக்கு உடுவில் வட்டார கல்வி ஆலோசகர் திரு. எஸ். ராசா தலைமை தாங்கினர். நீலம், மஞ்சள், பச்சை ஆகிய இல்லங்களுக்கிடையே போட்டி நடந்தது. நீல இல்லம் 130 புள்ளிகளையும், மஞ்சள் இல்லம் 121 புள்ளிகளையும், பச்சை இல்லம் 120 புள்ளிகளையும் பெற்றன.

'நாயும் எசமானும்' என்ற நிகழ்ச்சி பலரையும் கவரக் கூடியதாக விருந்தது.

ரசிப்பான இப் போட்டிகளில் பரிசுபெற்றவர்கள் விபரம் வருமாறு:

நாயுடன் ஓடுதல்: வே. ஏழுமலைநாதன், அ. சங்கரலிங்கம், மு. புஷ்பராசா.

உடையலங்காரம்: த. பத்மாதேவி, இ. புஷ்பராணி, பொ. மீனும்பிகை.

தலையணைப் போர் ஓட்டம்: அ. தர்மகுலசிங்கம், நா. முருகையா, பொ. மீனும்பிகை.

சமநிலைஓட்டம்: ந. புஷ்பலீலாதேவி, கு. பரலோகநாயகி, தி. விஜயலட்சுமி.

## சனசமூக நிலைய போட்டி விபரம்

சுழிபுரம், ஞாயிறு

யாழ்ப்பாண மாவட்ட சனசமூக நிலையங்களின் சமாச விழாவை முன்னிட்டு திருக்குறள் மனனத் தேர்வு கட்டுரை எழுதல் ஆகிய போட்டிகள் இம்மாதம் வரும் 19-ம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மண்டபத்தில் நடைபெறும். போட்டிகள் இரண்டு பிரிவாக நடைபெறும். கீழ்ப்பிரிவு, மேற்பிரிவு கொண்ட இருபாலர்களுக்கிடையே நடைபெறும். இப்போட்டியில் யாழ்ப்பாணக் குடாநாட்டிலுள்ள நூற்றுக்கு அதிகமான நிலையங்கள் கலந்து கொள்ள விண்ணப்பங்கள் அனுப்பியுள்ளன. இப் போட்டியில் வெற்றி பெறுபவர்கள் சமாஜ விழாவின் போது பரிசுகளை பெற்றுக் கொள்வர். போட்டிக்கான சகல ஒழுங்குகளையும் சமாஜச் செயலாளர் திரு. த. துரைசிங்கம் கவனித்து வருகின்றூர்.

## துன்னலை . . .

[6-ம் பக்கத் தொடர்ச்சி]

நான் ஜெயராசா, திரவியம் ஆகியோருடன் போனேன். சின்னமேளம் ஆடி முடிந்ததும் எதிரிகள் எங்களை கற்களால் எறிந்து வளால்வெட்டி கொட்டனுலும் அடித்தார்கள். இதன் பின்னர் கோயில் மனேஜர் எங்களை பொலிஸ் நிலையத்திற்கு அழைத்துச் சென்றூர்.

விசாரணையின் பின்னர் மாஜிஸ்திரேட் 4-ம், 5-ம், 6-ம் எதிரிகளை விடுதலை செய்து 1-ம், 2-ம் எதிரிகளை குற்றவாளிகளாகக் கண்டு இம்மாதம் 18-ம் திகதிக்கு தீர்ப்பு அளிப்பதை ஒத்திவைத்துள்ளார்.







றீஜென்ற்
தயார் பெயின்டுகள்
★ சிக்கனம்
★ பிரகாசம்
★ நீடிய பாவனை
ஆகியவற்றுக்கு

தயாரிப்பாளர்கள்:
சிலோன் பெயின்ட் இன்டஸ்ட்ரீஸ் லிமிட்டெட்
உலகப் புகழ்பெற்ற ரொபியாலக் தயாரிப்பாளர்.




GRANT 16


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பட்டின சபைகள் சமாஜ தலைவராக மத்துகம எம்.பி. தெரிவு

## காங்கேசன்துறை ப. ச. தலைவர் உபதலைவரானுர்

காங்கேசன்துறை, ஞாயிறு

அகில இலங்கை பட்டினசபைகளின் இரண்டாவது வருடாந்த மகாசபைக்கூட்டமும் மகாநாடும் நேற்று காங்கேசன்துறை யாழ். தியேட்டரில் நடைபெற்ற போது புருவருட தலைவராக ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்தவரும் மத்துகம எம். பி. யுமான தயா. டீ. பஸ்குவல் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

திரு. பஸ்குவல் மீண்டும் இப்பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

இவரை எதிர்த்து இப்பதவிக்குப் போட்டியிட்ட கெக்கராவைப் பட்டினசபைத் தலைவர் திரு. டேவிட்டைவிட இவர் 14 அதிகப்படியான வாக்குகள் பெற்ருர்.

உப தலைவராகக் காங்கேசன்துறைப் பட்டினசபைத் தலைவர் திரு. ஆ. வ. சதாசிவம் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டார்.

77 பட்டினசபைகளைக் கொண்ட அகில இலங்கைப் பட்டினசபைகள் சமாஜத்தில் 52 பட்டினசபைகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

### அமைச்சர் 'திரு' கலந்துகொள்வார்

இன்றும்தொடர்ந்துநடைபெறும் இந்த மகாநாட்டில் பிரதம விருந்தினராக உள்ளூராட்சி அமைச்சர் திரு. எம். திருச்செல்வம் கலந்து கொள்ளவிருக்கிருர்.

## பஸ்சேவை சீர்கேடு

மல்லாவி ஞாயிறு

சென்ற சில நாட்களாகத் துணுக்காய் யாழ்ப்பாணம் நேரடி பஸ் சேவை சீர்கேடான நிலையை நோக்கிக் கொண்டிருக்கிறது. நேரசூசிப்படி இ. போ. ச.வாகனங்கள் சேவை செய்வதில்லை என்பது மட்டுமல்ல, சிலசேவைகளும் துண்டிக்கப்படுகின்றன. இக்குறையை நீக்குமாறு இப்பகுதிப் பொது ஸ்தாபனங்களும், சில பிரமுகர்களும் பல முறை இ. போ. சவினரை வேண்டியும் எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லையாம்.

## வேலை நீக்கம்

சுழிபுரம், ஞாயிறு

வலிகாமம் மேற்கு ஐக்கிய பாற்பண்ணைச் சங்கத்தில் கடமையாற்றும் 7 தொழிலாளர்களுக்கு வேலைநீக்க நோட்டீஸ் வழங்கப்பட்டுள்ளதாக அறியப்படுகிறது

தொழிலாளர்கள் வேலைநீக்க நோட்டீஸை கையில் பெற்றுக்கொள்ள மறுத்ததாகவும், இதனுல் மேற்படி கடிதங்கள் பதிவுத் தபால் மூலமாக அனுப்பி வைக்கப்பட்டதாகவும் தெரியவருகிறது.

## திருடர் தொல்லை

யாழ்ப்பாணம், திங்.

யாழ்ப்பாண நகரத்தில் சில வீதிகளில் மின்சார வெளிச்சம் இல்லாததால் இரவு வேளைகளில் அவ்வீதிகளில் பொதுமக்கள் செல்ல அஞ்சுகின்றனர்.

பெரிய தபாற்கந்தோரிலிருந்து பண்ணை நோக்கிச் செல்லும் வீதியில் மின்சார வெளிச்சமில்லாததால் இரவில் அவ்வீதியில் திருடர் தொல்லை அதிகரித்திருப்பதாகத் தெரியவருகிறது.

நேற்றிரவு அவ்வீதியால் சென்ற ஒரு பெண்ணை சிலர் வழிமறித்ததாகவும், அப்பெண் வந்த வழியால் திரும்பி ஓடியதாகவும் கூறப்படுகிறது.

## '21 தினத்துக்குள் . ....

[5-ம்பக்கத்தொடர்ச்சி]

கள். இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட கற்களை அரிந்து பல வீடுகளைக்கட்டி எழுப்ப இவர்கள் உதவுகின்ருர்கள்.

### லொறி தடம்புரண்டது

கடந்த புதன்கிழமை லொறியொன்று திருகோணமலை - அநுராதபுரச்சந்தியில் தடம்புரண்டதனுல் லொறி சாரதியுட்பட மூவர் படுகாயத்துடன் திருமலை அரசாங்க ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். லொறிச்சாரதியின் நிலை ஆபத்தாகவுள்ளது.

### வீடுதீக்கிரை

அண்மையில் உப்புவெளிப் பகுதியில் ஓலைவீடொன்று திடீரென தீப்பிடித்துக் கொண்டது. செய்தி கிடைத்து உடன் தீயணைக்கும் படையினர் வந்து பார்த்தபோது வீடுமுற்ருக எரிந்து முடிந்துவிட்டது.

## தீண்டாமைக்கு பகிஷ்கரிப்பு

உடுப்பிட்டி, ஞாயிறு

''தீண்டாமைப் பிரச்னையைத் தீர்ப்பதற்கு புரட்சி முறையோ, சாத்வீக முறையோ வெற்றியளிக்க மாட்டாது. இதற்கு ஒரே வழி சிறுபான்மை சமூகம் ஆலயங்களுக்குச் செல்லாது பகிஷ்கரிக்கவேண்டும். இப்பகிஷ்கார இயக்கம் வலுப்பெற்ருல் ஆலயப்பிரவேசம் கட்டாயம் நடந்தே தீரும். சிறுபான்மை சமூகம் பகிஷ்கரித்தால் பல ஆலயங்கள் பொருளாதார வீழ்ச்சியை எதிர்பார்க்கவேண்டிய நிலை ஏற்படும். ஆலயபரிபாலனம் நிதிப்பற்ருக் குறையால் தடைப்பட நேரிடும்போது உயர்சமூகம் தாமாகவே ஆலயங்களைத் திறந்துவிடும்''

இவ்வாறு வடபிரதேச சமசமாஜ வாலிபர் சம்மேளனத்தலைவர் டாக்டர் எஸ். எஸ். மாசிலாமணி விடுத்துள்ள அறிக்கையொன்றில் குறிப்பிட்டுள்ளார்.

## மாகாண்டம

ஹொங்ஹொங், அச். 13

சீனுவில் சீனத்தலைவர்மா-சே-துங்கின் ஆதரவாளர்களுக்கும் எதிர்ப்பாளர்களுக்கும் கடும்மோதல் நடந்துகொண்டிருப்பதாக ஹுங்கிருந்து கிடைக்கும் செய்திகள்தெரிவிக்கின்றன. நேற்று பீகிங்கில் மா எதிர்ப்பு இயக்கத்தை கைவிட்டு விடும்படி பிரமாண்டமான ஓர்ஆர்ப்பாட்ட ஊர்வலமும் இடம்பெற்றதாம்.

## டிட்டோ-நாஸர் சந்தித்தனர்

கெய்ரோ, ஆக. 13

ஐக்கியஅரபுக்குடியரசுஜனுபதி நாஸரும் யூகோஸ்லேவேக்கியா அதிபர் திரு. டிட்டோவும் இங்கு மத்திய கிழக்கு நிலைமை பற்றி பேச்சுவார்த்தை நடாத்திஞர்கள். இஸ்ரேல் அரபுப்பிரதேசத்தில் பிடித்த பகுதிகளின் நிலைமை பற்றியும்இவர்கள் விவாதித்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

## கவர்னா ஜெனரல் மன்னிப்பு அளித்தார்

முல்லைத்தீவு, ஞாயிறு

அரசாங்க தேவைக்கு ஒதுக்கப்பட்ட முடிக்குரிய நிலத்தில் அத்துமீறி ஆக்கிரமித்த குற்றத்திற்காகத் தண்டிக்கப்பட்ட ஒருவரை கவர்னர் ஜெனரல் மன்னித்து அவரது சிறைத்தண்டனையை ரத்துச் செய்தார்.

நெடுங்கேணியைச்சேர்ந்த தண்டுவான் வாசியும் முன்னுள் கிராமசபைத் தலைவருமான தில்லையம்பலம் நாகலிங்கம் என்பவர் 1965ம் ஆண்டில் தண்டுவாளில்வன இலாகாவுக்கென ஒதுக்கப்பட்ட முடிக்குரிய காணியில் அத்துமீறிப் பிரவேசித்தாரென்றும், மேற்படி காணியில் உள்ள முடிக்குரிய மரங்களை அழித்தாரென்றும் முள்ளியவளை வன உத்தியோகஸ்தர் திரு. பரமசாமியினுல் தொடரப்பட்ட வழக்கை விசாரணைசெய்த முல்லைத்தீவு நீதிபதி திரு. இ. பரமகுருஎதிரியைக் குற்றவாளியாகக்கண்டு முதலாவது குற்றத்துக்கு ரூபா நூறுஅபராதமும் இரண்டாவது குற்றத்துக்கு நான்குமாதச் சாதாரணசிறைத் தண்டனையையும் விதித்துத் தீர்ப்பளித்தார், தீர்ப்பை ஆட்சேபித்து எதிரி சுப்ரீம் கோட்டுக்குஅப்பீல் செய்தார். அப்பீலை விசாரணை செய்த நீதியரசர் முதலாவது குற்றத்துக்கு விதித்த நூறு ரூபாய் அபராதத்தை ரூபா ஐம்பதாகக் குறைத்து இரண்டாவது குற்றத்துகான நான்கு மாதச் சாதாரண சிறைத்தண்டனையை ஊர்ஜிதப்படுத்தித் தீர்ப்பளித்தார்.

எதிரி நீதி அமைச்சர் ஊடாக மகாதேசாதிபதிக்கு மன்னிப்புக்கோரும் மனு வைத்தாக்கல்செய்தார். 600 ரூபா சிறை இலாகாவுக்குக் கட்டும்படியும் அத்துடன் காணியை விட்டுவிட வேண்டும் என்றும் நிபந்தனையிட்டு கவர்னர் ஜெனரல் மன்னிப்பு வழங்கியதைத் தொடர்ந்து யாழ். சிறைச்சாலைக்குக் கொண்டு செல்லப்பட்ட எதிரி 24மணித்தியாலத்தில் விடுதலை செய்யப்பட்டார்.

இப் பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால்யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலவீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1967-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 14-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

## நியமனம்

முல்லைத்தீவு, ஞாயிறு

முல்லைத்தீவுமகாவித்தியாலயஅதிபராகக்கடமையாற்றிய திரு. ரி. அலோசியஸை உதவிப்பாடசாலை பரிசோதகராக கல்விஇலாகா நியமித்துள்ளது. இவரின் இடத்துக்கு வவனியாத்தமிழ்மகாவித்தியாலயத்தின் அதிபராக கடமையாற்றிய திரு. இராசநாயகம் மாற்றலாகி வந்துள்ளார்.

## கிராமசேவகர்

முல்லைத்தீவு, ஞாயிறு

முல்லைத்தீவின் புதிய கிராமசேவையாளராக முள்ளியவளையிலிருந்து திரு. பொ. திருநாவுக்கரசு மாற்றலாகி வந்துள்ளார்,

## இருவருட கடுழியம்

மட்டக்களப்பு, ஞாயிறு

மூதூர் கொலை வழக்கில் எதிரியான வீரபத்திரன் சபாபதிப்பிள்ளைக்கு மட்டக்களப்பு சுப்ரீம் கோர்ட்டு நீதியரசர் திரு. அலஸ் இரண்டு வருட கடுழிய சிறைத்தண்டனைவிதித்தார்.

இவ்வழக்கில் மூதூரைச் சேர்ந்த கனகசபை கணபதிப்பிள்ளை என்பவரை வீரபத்திரன் சபாபதிப்பிள்ளை கத்தியால் குத்திக் கொலை செய்ததாகக்குற்றஞ் சாட்டப்பட்டிருந்தது.

சினிமா படம் தயாரிப்பதற்கு திராவிட முன்னேற்றக்கழக நிதியை உபயோகித்ததாக கடந்த வருடம் ஜூன்மாதம்24-ம்திகதிநாத்திகம் பத்திரிகையில் வெளியானது.

## மந்திரி சுகததாசா லண்டன் பயணம்

கொழும்பு, ஞாயிறு

தேசிய சேவை மந்திரி திரு. வி. ஏ. சுகததாசா வைத்திய சிகிச்சைக்காக லண்டன் பயணமானுர். லண்டன் ஆஸ்பத்திரி ஒன்றில் அவர் தங்கியிருந்து சிகிச்சைபெறுவார். அங்கு மூன்று வாரம் தங்கியிருப்பார். திரு. சுகததாசாவின் பார்லிமெண்டரிக் காரியதரிசி திரு. டி. பி. வெலகதரா பதில் தேசிய சேவை மந்திரியாக சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார். திருமதி சுகததாசாவும் தமது கணவருடன் சென்றுள்ளார்.

மட்டு நகரில்

## 50 ஆயிரம் ரூபா செலவில் மணிக்கூண்டுக் கோபுரம்

— நமது மட்டக்களப்பு நிருபர் —

மட்டக்களப்பு. ஞாயிறு

மட்டக்கடப்பு மாநகர சபை இரண்டாவது முறையாக மேயர் திரு. செ. இராசதுரையின் தலைமையில்கூடியது. எதிர்க்கட்சியினரால் மேயர் தெரிவுக் கூட்ட அறிக்கை சமர்ப்பிக்கப்படவில்லை எனக் கொண்டுவரப்பட்ட முறைப்பாட்டிற்குப் பதிலளித்து மேயர் கூறிய போது, அக்கூட்டம் ஆணையாளரால் நடத்தப்பட்டதால் அக்கூட்ட அறிக்கைக்கு சபையின் அங்கிகாரம் தேவையற்றது எனக் கூறினுர். சட்டதிட்டங்களைப் பார்வையிட்டபின் கூட்ட அறிக்கையை அடுத்த கூட்டத்தில் சமர்ப்பிப்பதாய் ஆணையாளர் கூறினுர்.

இரண்டாம் கூட்ட அறிக்கை சபையால் ஏற்றுக் கொள்ளப்பட்டபின் சபை தொடர்ந்து நடடபெற்றது.

மட்டக்களப்பு நகர் மத்தியில் 50 ஆயிரம் ரூபா செலவில் மணிக்கூண்டுக் கோபுரம் கட்டுவதற்கு புதிய சந்தைக்கான அரசாங்கத்தின் கடனுதவியில் ஒருபகுதியை உபயோகிக்க உத்தேசித்துள்ளதாகக் கூறப்பட்டது.

நகரின் நீர் விநியோக சீர்கேட்டைப்பற்றிப் பிரஸ்தாபிக்கப்பட்டபோது தக்க நடவடிக்கை எடுப்பதாக மேயர் கூறினுர்.

யாழ்ப்பாணம்

## பஸ் நிலையத் திருத்தங்கள் இ. போ. ச. தலைவர் ஆராய்ந்தார்

யாழ்ப்பாணம், ஞாயிறு

உத்தியோகபூர்வமாக யாழ்ப்பாண விஜயத்தை மேற்கொண்டிருக்கும் இலங்கைப் போக்குவரத்துச் சபைத் தலைவர் திரு. ஆர் ரி. டி. சில்வா நேற்றுக் காலை யாழ்ப்பாணம் புதிய பஸ் நிலையத்துக்கு விஜயம் செய்திருந்தார்.

புதிய பஸ் நிலையத்தில் பிரயாணிகள் தங்குவதற்காக நிறுவப்பட்டிருக்கும் தங்குநிலையங்கள், இ. போ. ச அலுவலகம், பிரயாணிகளின் செளகரியங்களையிட்டு செய்ய வேண்டிய திருத்தங்கள், இடநெருக்கடி ஆகியவை பற்றி இங்குள்ள அதிகாரிகளுடன் பேச்சு வார்த்தைகள் நடத்தியதோடு இவைகளை நேரில்பார்வையிட்டார்

அண்மையில் திறக்கப்பட்ட சுன்னுகம் புதிய பஸ் நிலையம், கோண்டாவில் மத்திய பஸ் டிப்போ ஆகியவற்றிற்கும் திரு. சில்வா சென்று பார்வையிட்டார்.

(ந. நி.)

## சிறையும் அபராதமும்

சென்னை, ஆக. 12

நாத்திகம் பத்திரிகையின் ஆசிரியரும் பதிப்பாளரும் பிரசுரகர்த்தாவுமான திரு. பி. ராமசுவாமிக்கு, ஒரு வருட சிறைத் தண்டனையும் 2000ரூபா அபராதமும் விதிக்கப்பட்டது.

## உள்ளூராட்சி சேவை காவற்காரர் பதவி உரும்பிராய் ப. ச.

மேற்படி பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. விண்ணப்பங்களின் முடிவுதிகதி 12-9-67.

3. வேதன அடிப்படை: ரூ.540—30 X 8 + 24 X 1-ரூ. 804 வருடாந்தம்.

4. முழு விபரங்களுக்கும் 1967-ம் ஆண்டின் 8 மாதம் 25-ந் திகதிய அரசாங்க வர்த்தமானியின் 4-வது பகுதியைத் தயவுசெய்து பார்க்கவும்.

க. பத்மராசா
உரும்பிராய் ப. ச.
தலைவர்.

8-8-1967,
உரும்பிராய்,
ப. ச. அலுவலகம். 59

## உள்ளூராட்சி சேவை சேவகர் பதவி உரும்பிராய் ப. ச.

மேற்படி பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. விண்ணப்பங்களின் முடிவு திகதி: 12-9-1967.

3. வேதன அடிப்படை: ரூ.540—30 X 8 + 1 X 24-ரூ. 804. வருடாந்தம்.

4. முழு விபரங்களுக்கும் 1967-ம் ஆண்டின் 8 மாதம் 25-ந் திகதிய அரசாங்க வர்த்தமானியின் 4-வது பகுதியைத்தயவுசெய்துபார்க்கவும்.

க. பத்மராசா
உரும்பிராய் ப. ச.
தலைவர்.

8-8-1967,
உரும்பிராய்,
ப. ச. அலுவலகம். 58

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org